வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 10.02.2024 சனிக்கிழமை | இதழ் : 41 | பக்கங்கள் : 12

# தென்னிந்தியாவுடன் தரைவழித் தொடர்பு

## இந்து சமுத்திர மாநாட்டில் ஜனாதிபதி



பேர்த், பெப்ரவரி 09

தென்னிந்தியாவுடன் வர்த்தகத்தை எளிதாக்கும் வகையில் - பிராந்தியத்தின் விநியோக மையமாக இலங்கையை மாற்றுவதற்கு இந்தியாவுடனான புதிய தரைவழித் தொடர்புகளை ஏற்படுத்த முயற்சிக்கிறோம் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

11



## யாழ். மாநகர ஆணையாளர் பதவியேற்றார்

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆணையாளராக ச. கிருஷ்ணேந்திரன் நேற்று வெள்ளிக்கிழமை தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

இதுவரை காலமும் யாழ்.மாநகரசபை ஆணையாளராக

11

வெப்ப காலநிலையால்:

## சிறுவரிடையே ஆஸ்துமா நோய் தாக்கம் அதிகரிப்பு

கொழும்பு, பெப். 10

நாட்டின் சிறுவர்கள் மத்தியில் ஆஸ்துமா (முட்டு) நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது. நாட்டில் நிலவும் கடும் வெப்ப காலநிலையே இதற்கு காரணம் என்று கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் குழந்தைகள் நல மருத்துவர் தீபால் பெரேரா கூறியுள்ளார்.

“வெப்ப காலநிலைக்கு மத்தியில் சிறுவர்கள் பாடசாலைகள், விளையாட்டு திடல்கள் என்பவற்றில் வெளிப்புற செயல்களில் ஈடுபடுகின்றனர். அவர்கள் ஆஸ்துமா தூண்டுதலால் பாதிக்கப்படுகின்றனர். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் ஆரோக்கியம் குறித்து விழிப்புடன் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

மேலும், புகைபிடிக்கும் இடங்களிலிருந்து குழந்தைகளை விலக்கி வைக்க வேண்டும். ஏனெனில், புகைப்பிடிப்பது சுவாச

11

தமிழ் அரசு பொதுச் செயலர் விவகாரம்:

## எனது சார்பிலான முடிவை ஆதரவாளர்களே எடுப்பர்!

### சிறீநேசன் தெரிவிப்பு

மட்டக்களப்பு, பெப். 10

தமிழ் அரசு கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை முதல் வருடத்தில் நான் பதவியை ஏற்பதா அல்லது விட்டுக் கொடுப்பதா என்பதை எனது ஆதரவாளர்களே தீர்மானிப்பார்கள் - இவ்வாறு அந்தக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறீநேசன் தெரிவித்துள்ளார்.

டான் தமிழ் ஒளியின் நெற்றிக்கண் நிகழ்ச்சிக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

11



## ஒருநாள் போட்டியில் நிஷங்க இரட்டை சதம்!

கண்டி, பெப். 10

ஒருநாள் போட்டிகளில் இரட்டை சதம் அடித்த முதல் இலங்கை வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார் இலங்கை அணியின் தொடக்க வீரரான பதும் நிஷங்க.

ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் அவர் ஆட்டமிழக்காமல் 210 ஓட்டங்களை குவித்திருந்தார்.

கண்டி - பல்லேகலை மைதானத்தில் நேற்று நடந்த போட்டியிலேயே அவர் இந்த சாதனையைப் படைத்தார். இந்தப் போட்டியில் அவிஷ்க பெர்னாண்டோவுடன் சேர்ந்து முதல் விக்கெட்டுக்காக 182 ஓட்டங்களை நிஷங்க குவித்தார்.

தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய பதும் நிஷங்க 20 பௌண்ட்ரிகள், 8

11

## போதைக்கு அடிமையான யுவதி மருத்துவமனையில்!

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட யுவதி ஒருவர் போதைப் பொருளுக்கு அடிமையானவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர், ஐஸ் போதைப் பொருளை நுகர்ந்து வந்துள்ளார் என்று பரிசோதனைகளில் உறுதியானது.

22 வயதான இந்த யுவதி யாழ்ப்பாணத்தில் நடனக் குழு ஒன்றில் நடனமாடுபவர் என்று தெரியவந்துள்ளது. அவர் பணியாற்றும் நடனக் குழுவைச் சேர்ந்தவர்களிடம் இருந்தே போதைப் பொருளை பெற்றுள்ளார் என்று கூறப்படுகின்றது.

தற்போது இந்தப் பெண் மருத்துவ கண்காணிப்பில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இந்தியாவுடன் பேச்சு நடத்தும் தேவைப்பாடு எமக்கு இல்லை!

### ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, பெப். 10

இந்தியாவுடன் பேச்சு நடத்த ஐக்கிய மக்கள் சக்தி தயாராகி வருவதாக செய்திகள் வெளியாகியிருந்தன. இந்த செய்தி முற்றிலும் தவறானது - பொய்யானது. ஐக்கிய மக்கள் சக்திக்கு அவ்வாறான தேவைப்பாடு ஒன்றில்லை. இந்தியாவுடனும் இந்தியத் தலைவர்களுடனும் ஐக்கிய மக்கள் சக்தி நெருக்கமாக பணியாற்றி வருகிறது என்று அந்தக் கட்சியின் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் பணிமனையில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

11

## ‘கோபா’ குழு தலைவராக மீண்டும் ஹர்ஷ டி சில்வா!

கொழும்பு, பெப். 10

அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் பதவிக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கான உறுப்பினர்கள் தெரிவு குழுவால் நியமிக்கப்பட்டனர். இதன் தலைவ ராக கலாநிதி ஹர்ஷ டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

11

## பரிந்துரைகளைப் புறந்தள்ளி சட்டத்தை நிறைவேற்றமுடியாது!

### மனித உரிமைகள் ஆணைக்குழு

கொழும்பு, பெப். 10

நிகழ்நிலை காப்பு சட்டத்தின் சில பிரிவுகள் உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்துடன் இணங்கவில்லை என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சபாநாயகருக்கு அறிவித்துள்ளது. இந்த குறைபாடுகள் தொடர்பில் தாம் மிகுந்த கவலையடைவதாக மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

11

## எமது மக்களின் நலனுக்கான இலக்கு ரணில் காலத்தில் எட்டப்படவேண்டும்!

### அமைச்சர் டக்ளஸ் சொல்கிறார்

கொழும்பு, பெப். 10

எமது மக்களின் நலன் கருதிய இலக்கானது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் காலத்திலேயே எட்டப்படவேண்டும் என்று கூறியுள்ளார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை தொடர்பான விவாதத்தில் நேற்று பங்கேற்று பேசியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

எமது மக்களின் அன்றாடப் பிரச்னைகளாக இருந்தாலும் சரி, அரசியல் தீர்வு பிரச்னையாக இருந்தாலும் சரி. இந்த காலகட்டத்ததை நாம் தவற விடுவோமானால் மீளவும் இத்தகையதொரு பொன்னான காலத்தை நினைத்துப் பார்க்க இயலாது என்றே கருதுகிறேன்.

தேர்தல்களில் நாங்கள் தனித்தனியே போட்டியிடுவோம். நாட்டைக் கட்டியெழுப்புவதில் ஒன்றிணைவோம் என்ற ஜனாதிபதியின் அழைப்பையே நான் மீண்டும் இங்கு

11

## “மின் நெருக்கடி மீண்டும் வரும்!”

கொழும்பு, பெப். 10

முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகளை நடைமுறைப் படுத்தாவிடின் நாட்டில் மீண்டும் மின்சார நெருக்கடி ஏற்படும் என இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் நரேந்திர சில்வா தெரிவித்துள்ளார். புதுப்பிக்கத்தக்க மின்சார நிலைய

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

இரண்டாயிரத்து பதினைந்தாம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் இரவோடு இரவாக அம் பாந்தோட்டைக்கு விமானத்தில் சென்ற மகிந்த ராஜபக்ஷ மீண்டும் மைத்திரியுடன் இணைந்து பாராளுமன்றத் தேர்தலை எதிர்கொண்ட போதிலும், 'அவர் வெற்றி பெற்றாலும் பிரதமர் பதவி மகிந்தவுக்கு வழங்கமாட்டேன்' என்று கடைசி நேரத்தில் மைத்திரி பல்டி அடித்தது ஞாபகமிருக்கலாம்.

கடைசி பிரசாரக் கூட்டத்தில் அப்படியோர் அறிவிப்பை மைத்திரி வெளியிடாமல் இருந்திருந்தால், வெற்றிலை சின்னத்தில் அப்போது போட்டியிட்ட மகிந்த அணிதான் அதிகூடிய ஆசனங்களை பெற்றிருக்கும்.

முதலில் காலையில் தன்னோடு அப்பம் சாப்பிட்ட மைத்திரி மாலையில் எதிரணிக்கு போனது ஞாபகம் இருந்தபோதிலும், அவரோடு இணைந்து வெற்றிலை சின்னத் தில் போட்டியிட்ட தன் தவறை உணர்ந்து கொண்டதால்தான் மகிந்த பொதுஜன பெரமுன என்ற கட்சியை புதிதாக ஆரம்பிக்க வேண்டியேற்பட்டது.

ஆனால், அவர் அப்படி புதிய கட்சியை ஆரம்பித்த போது அவரின் கட்சியை வடிவமைப்பதிலிருந்து கட்சியை மக்கள் மத்தியில் கொண்டு சென்றது வரை பின்னாலிருந்து அவருக்கு ஆலோசனை வழங்கியது சீனா என்பதும் ஒன்றும் இரகசியமானது அல்ல. சீன கம்யூனிஸ்ட் கட்சிபோல அதனை கட்டியெழுப்ப அப்போது சீனா உதவியதாகக் கூறப்படுவதுண்டு. தன்னைத் தோற்கடித்ததில் இந்தியாவின் உளவு அமைப்பான றோவுக்கு முக்கிய பங்கு உண்டு என்று பகிரங்கமாக அறிவித்தவர் மகிந்தர்.

ஆனால், கட்சியைப் புதிதாகத் தொடங்கி அவர்களின் ஆலோசனையைப் பெற்று கட்டியமைத்தவர், அதற்கு பின்னர் தேர்தலில் வெற்றி பெற்றபின்னர் - சீனாவை கண்டுகொள்ளாமல் பக்கத்து நாட்டோடு நெருங்கியது அவர் செய்த தவறு என்பதையும் பின்னாளில் அவர் உணர்ந்து கொண்டிருப்பார். அதற்கு அவர் காரணமல்ல என்பதும் புரிந்து கொள்ளக் கூடியதே. ஜனாதிபதியாக இருந்த கோட் டாபயவும் நிதி அமைச்சராக இருந்த பஸிலுமே இந்தியா பக்கம் சாய்வதில் முன்னின்றவர்கள். இதனால், கடைசியில் என்ன நடந்தது என்பது என்றும் இங்கே எழுதித் தெரியவேண்டும் என்பதல்ல.

இப்போது, சீனாவின் கைப்பிள்ளைகளான ஜே. வி. பியினர் இந்தியாவுக்கு பயணம் செய்திருப்பது எதற்காக என்பதும் நாம் புரிந்துகொள்ளக்கூடியதுதான்.

இப்படியொரு சந்திப்புகளுக்காக சுமார் எட்டு மாதங்களுக்கு முன்னரே அவர்கள் இந்தியாவிடம் கோரிக்கை விடுத்திருந்ததாகவும் இப்போதுதான் அதற்கான அழைப்புக் கிடைத்ததாகவும் அவர்களுக்கு நெருக்கமான வட்டாரங்களிலிருந்து தெரியவந்தது.

அடுத்து நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் மும்முனைப் போட்டி ஏற்படுமானால் யார் வெற்றிபெறுவார் கள் என்பதை ஊகிப்பது சற்று கடினமானதாகவே இருக்கும் என்றே எதிர்வு கூறப்பட்டு வருகின்றனது. எந்தவொரு வேட்பாளரும் ஐம்பது சதவிகித வாக்குகளைப் பெறமுடியாது போனால் இறுதியில் யார் அதிகம் பெறுகின்றாரோ அவரே வெற்றிபெறும் வாய்ப்பு இருப்பதால் - அத்தகைய நிலைமை ஒன்று ஏற்பட்டால் சிலவேளைகளில் ஜே. வி. பி. வெற்றிபெறலாம் என்று கணக் குப்போடும் அமெரிக்காவும் இந்தியாவும் இரு முனை போட்டி ஏற்படுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளன என்று கூறப்படும் நிலையி லேயே இந்தியாவை நோக்கி செல்ல ஜே. வி. பி. முயன்றிருப்பதாக சொல்லப்படுகின்றது.

அரசியலில் எதுவும் நடக்கலாம் என்பார்கள். அதற்காக இன்று ஓர் அணியில் இருப்பவர் நாளை மற்றுமோர் அணிக்கு செல்வது ஒன்றும் ஆச்சரியமானது இல்லைத் தான். ஆனால், அப்படி அணி மாறினாலும் எவரும் தங்கள் அடிப்படை குணாம்சங்களை மாற்றிவிடுவதில்லை.

இந்திய எதிர்ப்பு என்ற ஒன்றையே தமது மூலதனமாகக் கொண்டு வளர்ச்சியடைந்தவர்கள், இன்று இந்தியாவை நோக்கி சொல்வது எதற்காக என்பதையும் புரிந்துகொள்வது கடினமானது அல்ல.

அதுவல்ல, இன்று நாம் சொல்ல வருவது. கடும் சீன சார்பு அணியான ஜே. வி. பியே தமது தேவைக்காக இந்தி யாவை நோக்கி நகர - அல்லது நகர்வது போலக் காட்டிக் கொள்கின்றபோது - எம்மை முழுமையாகக் கைவிட்ட பின்னரும் நாம் இந்தியாவை நோக்கியே கைகளை நீட்டிக் கொண்டிருக்கப் போகின்றோமா?

அல்லது இந்தியா சொல்வதுபோல, ஒரு தீர்வுக்காக தமிழ் தரப்புகள் எல்லாம் முதலில் ஒன்றுபட்டு, இந்தியாவை நோக்கி கை நீட்டப் போகின்றோமா? என்பதைத் தீர்மானிக்கவேண்டும்.!

**- ஊர்க்குருவி.**

# யாழ்ப்பாணத்தில் 106 பேருக்கு உறுதிப்பத்திரம் வழங்கப்பட்டது

*யாழ்ப்பாணம், பெப். 10*

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் யாழ்ப்பாணத்தில் 106 பயனாளிகளுக்கு உறுதிப் பத்திரம் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 106 பயனாளிகளுக்கு "அறுதி உறுதிப்பத்திரம் வழங்கல்" நிகழ்வு நேற்று நடந்தது. யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது, மேலதிகமாக 20 பயனாளிகளுக்கு வீடமைப்பு கடனுக்கான முதல் கட்ட காசோலையும் வழங்கி வைக்கப்பட்டது.



இந்த நிகழ்வில், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் ரஜீவ் சூரியாராச்சி, உப தலைவர் லக்ஷ்மன் குணவர்தன, யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) கே. சிறீமோகனன், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் எம். ரவீந்திரன், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர். (ஐ)

# ஜேர்மனி தூதுவருடன் சிறீதரன் சந்திப்பு!



*கொழும்பு, பெப். 10*

இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் பெலிக்ஸ் நியூமனை இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவராக தெரிவான சி. சிறீதரன் எம். பி. சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்பு ஜேர்மன் தூதுவரின் பணிமனையில் நடைபெற்றது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட சிறீதரன் எம்.பிக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் நோக்கில் ஜேர்மன் தூதரகத்தால் இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

ஈழ அரசியல் பரப்பை முன்னிறுத்திய அவரது அடுத்த கட்ட செயல்நோக்குகள் குறித்து தாம் கரிசனையோடிருப்பதாக தூதுவர் தெரிவித்திருந்தார் என்றும் கூறப்பட்டது. (ஐ)



## அரசின் வருமானம் 25 வீதத்தால் உயர்வு

*கொழும்பு, பெப். 10*

ஜனவரி மாதத்தில் அரசாங்க வருமானம் 25 வீதத்தால் அதிகரித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

அதிகரிக்கப்பட்ட வற் மூலம் அரசாங்கத்துக்கு 2 ஆயிரத்து 740 கோடி ரூபாய் வருமானம் கிடைத்ததாக அவர் குறிப்பிட்டார்.

ஜனவரி மாதத்தில் சுங்கத் திணைக்கள வருமானத்தை விட 11 வீதமும் கலால் திணைக்கள வருமானத்தை விட 16.6 வீதமும் அரசாங்க வருமானம் அதிகரித்துள்ளதாக நேற்று முன்தினம் அவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

## ஐவர் சுட்டுக் கொலை; இதுவரை 12 பேர் கைது!

*கொழும்பு, பெப். 10*

அபே ஜனபலய கட்சியின் தலைவர் சமன் பெரேரா உள்ளிட்ட ஐவர் பெலியத்தையில் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மற்றுமொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலைகளை செய்வதற்காக சந்தேகநபர்கள் பயணித்த ஜீப்பிற்கு குறித்த சந்தேகநபர் போலி ஆவணங்களை தயாரித்து வழங்கியுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

57 வயதான அவர் நாரஹேன்பிட்டி, கிருலப்பனை வீதியை சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர். குறித்த கொலைச் சம்பவம் தொடர்பில் இது வரை 12 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

# நடராஜ இராமலிங்க வித்திக்கு மலசலகூடம் கையளிப்பு!



*யாழ்ப்பாணம், பெப். 08*

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் கோப்பாய் கிளையால் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தின் மலசலகூடம் புனரமைப்பு செய்து கையளிக்கப்பட்டது.

பாடசாலை சமூகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க 8 இலட்சம் ரூபாய் செலவில் இந்தப் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டன. புனரமைக்கப்பட்ட மலசலகூடத்தை கையளிக்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை பாடசாலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நூற்றாண்டு மாவட்ட ஆளுநர் லயன் மருத்துவர் வை. தியாகராஜா, கோப்பாய் கிளை முன்னாள் தலைவர் லயன் வி. அரவிந்தன், தற்போதைய தலைவர் லயன் யோ. சஜீஷ் செயலாளர் லயன் ம. விஜேந்தன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
10.02.2024 சனிக்கிழமை
சோபகிருது வருடம், தை 27

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அமெரிக்காவிடம் சுயநிர்யண உரிமையை கோரலாமா?

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலரை சந்தித்துக் கலந்துரையாடியிருக்கின்றார். இதன்போது, சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான அரசியல் தீர்வை வலியுறுத்தினார் என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. அமெரிக்காவுக்கு செல்லும் வசதியிருந்தால் அங்கு எதை வேண்டுமனாலும் கூறிவிட்டு வரலாம் – அதில் பிரச்னை ஒன்றுமில்லை – ஆனால், அமெரிக்காவின் வெளிவிவகாரக் கொள்கையைப் புரிந்து கொண்டு பேசுவதனால் அங்கு எதைப் பேசுவது பொருத்தம் என்னும் புரிதலுடன்தான் பேசவேண்டும். குறித்த காங்கிரஸ் உறுப்பினர்கள் புலம்பெயர் அமைப்புகளின் நிகழ்வுகளில் வழமையாக பங்குகொள்பவர்கள்தான்.

அமெரிக்கத் தூதுவர் வடக்குக்கு இரண்டு தடவைகள் வந்து சென்றிருக்கின்றார். இதன்போது, வடக்கின் சிவில் சமூக பிரதிநிதிகள் மற்றும் பத்திரிகை ஆசிரியர்களை சந்தித்திருந்தார். இதன்போது எவரேனும் அரசியல் தீர்வு தொடர்பில் கேள்வி கேட்டால் அவரின் பதில் மிகவும் தெளிவானதாக இருக்கும் – அதாவது, நாங்கள் உள்ளூரில் கண்டடையக் கூடிய அரசியல் தீர்வை ஊக்குவிக்கின்றோம் – இராஜதந்திரிகள் என்னும் வகையில் எங்களுக்கு வரையறைகள் உண்டு.

அமெரிக்க இராஜதந்திரிகள் இதுவரையில் ஆகக்குறைந்தது அரசமைப்பில் உள்ள 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் கூட பேசியதில்லை. இதற்கு முன்னர் அமெரிக்கத் தூதுவராக இருந்தவர் அலைனா டெப்லிஸ். அவர் ஒரு முறை 'டான்' தமிழ் ஒளி தொலைக்காட்சிக்கு நேர்காணல் ஒன்றையும் வழங்கியிருந்தார். யாழ்ப்பாண மக்களுக்கு அமெரிக்காவின் நிலைப்பாடுகளை வெளிப்படுத்துவதற்காகவே யாழ்ப்பாணத்தில் மிகவும் செல்வாக்குமிக்க தொலைக்காட்சியில் தனது கருத்துகளை பதிவு செய்ய விரும்பியிருந்தார். அவரிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது – அதாவது, புதிய அரசியல் யாப்பு தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன – தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன? அவரின் பதில் தெளிவானது – அதாவது, இலங்கைக்கான அரசியல் யாப்பு எவ்வாறு அமைய வேண்டுமென்று இலங்கை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும் – அதில் நாங்கள் தலையிட முடியாது. சில விழுமியங்களை நாங்கள் வலியுறுத்துகின்றோம் – அவைகள் அமெரிக்காவில் இருப்பவை – அதாவது, நல்லாட்சி பண்புகள், மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

இராஜதந்திரிகள் எப்போதும் மிகவும் தெளிவாகவும் உறுதியாகவும் பேசுபவர்கள். அவ்வாறு பேசினால்தான் அவர்கள் இராஜதந்திரிகள். அமெரிக்க வெளிவிவகார கொள்கையின் நிழலின் கீழ்தான் அவர்கள் பேசுகின்றனர். அதேபோன்று, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் மிக உயர் அதிகாரியான விக்ரோறியா நூலண்ட் தமிழ்க் கட்சிகளை சந்தித்திருந்தார். கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் அந்த சந்திப்பில் இருந்தார். அவர் என்ன கூறினார்? சுயநிர்ணய உரிமை பற்றியா பேசினார்? அரசியல் தீர்வு விடயத்தில் படிப்படியாக முன்னேறுவது தொடர்பில்தான் பேசிச் சென்றார். படிப்படியாக என்றால் என்ன?

அமெரிக்க அரசியல் கட்டமைப்பு மிகவும் சிக்கலானது – அங்கு பிறிதொரு நாட்டில் வாழும் சிறிய மக்கள் கூட்டமொன்றுக்கு சுயநிர்ணய உரிமையை வலியுறுத்துமாறு பேசுவதே சிக்கலானது – ஏனெனில், சுயநிர்ணய உரிமை என்பது அடிப்படையில் பிரிந்து செல்லும் உரிமையை உட்கொண்டிருப்பது. அதனை வலியுறுத்தினால் பின்னர் பிரிந்து செல்வதையும் ஆதரிக்க வேண்டும். இதன் காரணமாகவே இராஜதந்திரிகள் அந்தச் சொல்லை உச்சரிப்பதில்லை. அமெரிக்கா ஒருபோதும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் தீர்க்கமான நிலைப்பாட்டை எடுக்காது. எதுவானாலும் இந்தியாவின் கரிசனைகளை உள்வாங்கித்தான் விடயங்களை செவிமடுக்கும் – ஆனால், மனித உரிமைகள் விடயத்தில் தலையீடு செய்யும் – அது அமெரிக்காவின் வெளிவிவகாரக் கொள்கை.

# விபத்துக்குள்ளாகி யாழ். போதனாவில் சேர்க்கப்பட்டவர்களில் 76 பேர் மரணம்!

யாழ்ப்பாணம், பெப். 10

கடந்த 2023ஆம் ஆண்டு, விபத்துக்கு உள்ளாகி சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களில் 76 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர் என்று மருத்துவமனை பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் விபத்துக்களில் சிக்கிய நிலையில் ஆயிரத்து 559 பேர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட் டனர். அவர்களில் 76 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர் என்றும் அவர் கூறினார்.

(ஐ)

### புளியம்பொக்கணை நாகதம்பிரான் பொங்கல்:

# திருவிழா ஏற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடல் நடைபெற்றது!

கிளிநொச்சி, பெப். 10

வரலாற்று பிரசித்தி பெற்ற புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பங்குனி உத்தர பொங்கல் விழா வரும் மார்ச் 24ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தத் திருவிழாவின் போது ஏற்பாடு செய்யப்பட வேண்டிய போக்குவரத்து, பாதுகாப்பு மற்று சுகாதார வசதிகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் தலைமையில் ஆலய முன்றலில் நடைபெற்றது.

இதில், கண்டாவளை பிரதேச செயலாளர், மாவட்ட உதவி மாவட்ட செயலாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாவட்ட இலங்கை போக்குவரத்து மற்றும் தனியார் போக்கு வரத்து துறையினர், மின்சார சபை உத்தியோகத்தர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், தொடர்புடைய திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள், ஆலய நிர்வாகத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த முறையும் பாரம்பரிய முறைப்படி பண்டம் எடுக்கும் வைபவம் புத்தூர் சந்தி மீசாலையிலிருந்து எடுத்துச் செல்லப்படும்

எதிர்வரும் மார்ச் 17ஆம் திகதி விளக்கு வைப்புடன் ஆரம்பமாகும் பொங்கல் திருவிழா அன்று பிற்பகல் பண்ட வண்டில்கள் புத்தூர் சந்தி நோக்கி சென்று பொங்கல் தினமான மார்ச் 24ஆம் திகதி ஆலயத்தை வந்தடையும்.

(ஐ)

# மக்கள் உணர்ந்தும்கொள்ளும் விதமாக மின் கட்டணம் குறைக்கப்பட வேண்டும்!

## சபையில் எதிர்க்கட்சி தலைவர்

கொழும்பு, பெப். 10

மின்சார கட்டணத்தை 4 சதவீதமாக குறைத்த விடயத்தில் திருப்திபட முடியாது. மக்கள் உணர்ந்து கொள்ளும் விதமாக கட்டணக் குறைப்பை மேற்கொள்ள வேண்டும் - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.



நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர்,

கலாநிதி ஹர்ஷ டி சில்வா தலைமையிலான அரச பொது நிதிக் குழு மற்றும் வெரிட்டே ரிசேர்ச் நிறுவனம் பகுப்பாய்வின் பிரகாரம், தெற்காசியாவிலேயே நமது நாடுதான் அதிக மின்சாரக் கட்டணத்தை அறவிடுகிறது. தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில், நமது நாட்டில் 3 மடங்கு அதிக மின் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது.


நாட்டில், 100 மின்சார அலகுகளுக்கு மாதத்துக்கு 5,280 ரூபாய் வசூலிக்கப்படுகிறது. தெற்காசியாவின் ஏனைய நாடுகளில் 2,078 ரூபாயே வசூலிக்கப்படுகிறது.

200 அலகுகளுக்கு எமது நாட்டில் 12,960 ரூபாய் வசூலிக்கப்படுவதோடு தெற்காசியாவின் ஏனைய நாடுகளில் 4,609 ரூபாவே வசூலிக்கப்படுகிறது.

எனவே, இது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தப்பட வேண்டும். ஏனென்றால், ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதால் நுகர்வோர் மட்டுமின்றி, தொழில்முனைவோருக்கும் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

சலுகை வழங்குங்கள். வாக்குகளை இலக்காகக் கொண்டு மின் கட்டணத்தை 4 சதவீதமாக குறைத்த விடயத்தில் திருப்திபட முடியாது. மக்கள் உணர்ந்து கொள்ளும் விதமாக கட்டணக் குறைப்பை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு

பெப்ரவரி - 10 சனிக்கிழமை
சோபகிருது வருடம் - தை 27
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : பிரதமை




**மேடம்**
உங்களின் நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

**இடபம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் தொந்தரவு குறையும். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஒய்வெடுக்க முடியாதபடி வேலைச்சுமையும் அலைச்சலும் இருக்கும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஒத்துழைப்பு குறையும். கவனம் தேவைப்படும் நாள்.

**கடகம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். மனைவிவழியில் நல்ல செய்தி உண்டு. உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**சிம்மம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளால் சமூக அந்தஸ்து உயரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வசதிப்பெருகும். தலைமைக்கு நெருக்கமாவீர்கள். திடீர் யோகம் கிட்டும்.

**கன்னி**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் பழைய சிக்கல்கள் தீரும். கனவு நனவாகும் நாள்.

**துலாம்**
எதிர்ப்புகள் அடங்கும். பிள்ளைகளால் ஆதரவு கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடியான சலுகைகள் மூலம் போட்டிகளை சமாளிப்பீர்கள். புதிய சலுகைகள் கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும்.

**விருட்சிகம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் ஒருசில மாற்றங்கள் செய்வீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். வெற்றி பெறும் நாள்.

**தனுசு**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முதலில் சந்தேகப்படுவதை நிறுத்துங்கள். மற்றவர்களுக்காக பரிந்து பேசி பிரச்னைகளில் சிக்கிக் கொள்ளாதீர்கள். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டும்.

**கும்பம்**
எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். வாகனத்தில் அதிக வேகம் வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது.

**மீனம்**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். தொலில் லாபம் அதிகரிக்கும். வியாபாரத்தில் நவீன உத்திகளைக் கையாளுவீர்கள். புது பொறுப்புகளை ஏற்பீர்கள். அனுபவ அறிவால் சாதிக்கும் நாள்.

# தமிழகத்தில் 39 இடங்களில் இந்தியா கூட்டணி வெல்லும்

## கருத்துக்கணிப்பில் வெளியானது

சென்னை, பெப். 10

மக்களவை தேர்தலில் தமிழகத்தில் இண்டியா கூட்டணி 39 இடங்களிலும் வெல்லும் என்று 'இந்தியா ருடே' நடத்திய தேர்தலுக்கு முந்தைய கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது.

நாடு முழுவதும் மோடி அலை வீசுவதாகவும், 3ஆவது முறையாக பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று மோடி பிரதமராவார் எனவும் பெரும்பாலானோர் மத்தியில் கருத்து நிலவுகிறது. இந்நிலையில் இந்தியா ருடே குழுமம் சார்பில் தேர்தலுக்கு முந்தைய கருத்துக்கணிப்பை கடந்த டிசெம்பர் 15ஆம் திகதி முதல் ஜனவரி 28ஆம் திகதி வரை அனைத்து மக்களவை தொகுதிகளிலும் நடத்தியுள்ளது. இதில் பல்வேறு தரப்பட்ட 35 ஆயிரத்து 801 பேரிடம் கருத்துகளை கேட்டறிந்துள்ளது.

இந்த கருத்துக்கணிப்பில் வரும் மக்களவை தேர்தலில் இந்தியா கூட்டணி தமிழகத்தில் 39 இடங்களிலும் வெல்லும் என குறிப்பிட்டுள்ளது.

மேலும், பா. ஜ. க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி மற்றும் இதர கூட்டணிகள் ஓரிடத்தில்கூட வெற்றி பெறாது என்றும் இந்தியா கூட்டணி 47 சதவீத வாக்குகளையும், தேசிய ஜனநாயக கூட்டணி 15 சதவீத வாக்குகளையும், இதர கூட்டணிகள் 38 சதவீத வாக்குகளையும் பெறும் என கருத்துக்கணிப்பில் தெரியவந்துள்ளது.

(ஐ)

# நேரு குடும்பத்தை சேர்ந்தவர் ஸ்ரீபெரும்பதூரில் போட்டி?

சென்னை, பெப். 09

ஸ்ரீபெரும்புதூர் தொகுதியை இம்முறை காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்க வேண்டும் என்று செங்கல்பட்டு வடக்கு மாவட்ட காங்கிரஸில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு வடக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சியின் வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டத்தில் பேசிய ஸ்ரீபெரும்புதூர் பாராளுமன்ற தொகுதி பொறுப்பாளரான முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகானந்தம், "டில்லி மேலிடத்திடம், ஸ்ரீபெரும்புதூர், கன்னியாகுமரியில் வெற்றி பெறுவோம் என தெரிவித்துள்ளேன். எனவே, நேரு குடும்பத்தை சேர்ந்த ஒருவர் இந்த தொகுதியில் போட்டியிட அதிக வாய்ப்புள்ளது" என்றார்.

பல ஆண்டுகளாக ஸ்ரீபெரும்புதூர் மக்களவைத் தொகுதியை காங்கிரஸ் கட்சியினர் தொடர்ந்து கேட்டு வருகின்றனர்.

இந்தியாவின் முன்னாள் பிரதமரும் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ராஜீவ் காந்தி ஸ்ரீபெரும்புதூரிலேயே கொல்லப்பட்டார். அங்கு அந்தக் கட்சிக்கு பெரும் நிறைவேற்று இருப்பதாகவும் கருதப்படுகின்றது. இந்தக் காரணங்களாலேயே காங்கிரஸ் கட்சி அந்தத் தொகுதியை தொடர்ந்தும் தமக்கு கேட்டு வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# அ. தி. மு. க. கூட்டணியில் தே. மு. தி. க. 14 தொகுதிகள், ஒரு ராஜ்ய சபா எம். பி.?

சென்னை, பெப். 09

தமிழகத்தில் பாராளுமன்ற தேர்தல் களம் சூடு பிடித்துள்ள நிலையில் அ. தி. மு. க. கூட்டணியில் இடம்பெற்று தேர்தலை சந்திக்க தே. மு. தி. க. முடிவு செய்துள்ளது.

இதுதொடர்பாக நேரடி பேச்சுகள் தொடங்கப்படாத நிலையில் இரகசிய பேச்சு தீவிரமாக நடைபெற்று வருகிறது.

பாராளுமன்ற தேர்தலில் 14 தொகுதிகள் மற்றும் ஒரு மேல் சபை எம். பி. பதவியை தரும் கட்சியுடனேயே கூட்டணி என்று தே. மு. தி. க. பொதுச் செயலாளர் பிரேமலதா அறிவித்துள்ளார். அ. தி. மு. க. கூட்டணியில் இடம்பெறும் பட்சத்தில் தே. மு. தி. கவுக்கு அத்தனை தொகுதிகள் ஒதுக்கப்படுமா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இதே நேரத்தில் பெரிய கட்சிகள் எதுவும் கூட்டணியில் இல்லாத நிலையில் குறிப்பிடத்தக்க இடங்கள் தே. மு. தி. கவுக்கு ஒதுக்க அ. தி. மு. க. தயாராக இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

# 'என் மண் என் மக்கள்' யாத்திரை; தமிழக அரசியலை புரட்டிப்போடும்!

## அண்ணாமலை நம்பிக்கை

சென்னை, பெப். 09

'என் மண் என் மக்கள்' யாத் திரை, தமிழகத்தின் அரசியலை அடியோடு புரட்டிப் போடும் - என்று நம்பிக்கை வெளியிட் டுள்ளார் பா. ஜ. க. கட்சியின் தமிழ்நாடு தலைவர் அண்ணா மலை.

தமிழகம் முழுவதும் பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணா மலை மேற்கொண்டு வரும் 'என் மண் என் மக்கள்' யாத்தி ரையின் 190ஆவது நாள் நடை பயணம் நேற்றுமுன்தினம் திருத்தணி, திருவள்ளூர், ஸ்ரீபெரும்புதூர் ஆகிய இடங்க ளில் நடைபெற்றது.

திருத்தணியில் முருகன் கோயில் மலை பாதை சந்திப்பு பகுதியில் இருந்து நடைபய ணம் தொடங்கிய அண்ணாமலை சுமார் ஒரு கி. மீ. தூரம் நடந்து நகராட்சி அலுவலகம் அருகே நிறைவு செய்தார். கர காட்டம், பம்பை மேளம், கேரள செண்டை மேளம், புலி ஆட்டம், பொய்க்கால் குதிரை போன்ற நிகழ்வுகளுடன் நடைபெற்றது.



தமிழகத்தில் பா. ஜ. க. முதல் சக்தியாக உருவெடுத்து இருக்கிறது, 'என் மண், என் மக்கள்' யாத்திரை மக்கள் இயக்கமாக மாறியிருக்கிறது.

இந்த யாத்திரை, தமிழகத் தின் அரசியலை அடியோடு புரட்டிப் போடும் என்ற நம்பிக்கையோடு நடந்துக் கொண்டிருக்கிறது என்று அப்போது அண்ணாமலை பேசினார்.

(ஐ)

# பல்கலை. விரிவுரையாளர்கள் பெற்ற கடனில் 1,300 மில்லியன் ரூபாவைச் செலுத்தவில்லை

## நீதி அமைச்சர் தகவல்



கொழும்பு, பெப். 10

**பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உயர்கல்விக்காக வெளிநாடுகளுக்கு செல்வதற்கு அரச வங்கிகள் மூலம் 1,300 மில்லியன் ரூபாவை கடனாக பெற்றுக் கொண்டுள்ள போதும் அதனை மீளச் செலுத்த தவறியுள்ளனர் என நீதியமைச்சர் விஜேதாச தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி ஆகியவை நாட்டின் தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காகவே ஆரம்பிக்கப்பட்டன. குறிப்பாக அந்த வங்கிகள் மூலம் விவசாயத்துறை மற்றும் கைத்தொழில் துறையை முன்னேற்றுவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் காலத்தில் அனைத்து விவசாய நிறுவனங்களிலும் இலங்கை வங்கி கிளை இயங்கி வந்துள்ளது.

அந்தந்த பிரதேசங்களில் வாழும் மக்கள் தமது விவசாய நடவடிக்கைகளுக்காக கடன் வழங்கும் நடைமுறையை அந்த வங்கிகள் முன்னெடுத்தன.

அந்த வகையில் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியன அவ்வாறு வழங்கியுள்ள மூன்றாம் கட்ட கடனில் 602 பில்லியன் ரூபா கடன் பெற்றுள்ளவர்களால் மீள செலுத்தப்படாமல் உள்ளது.

அந்த வகையில் சிறு மற்றும் நடுத்தர கைத்தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு நியாயமான வட்டியில் கடன் வழங்குவதற்கான வாய்ப்பு இருந்த போதும் அரச வங்கிகள் இரண்டும் பின்பற்றிய கொள்கை காரணமாக 602 பில்லியன் ரூபா நாட்டுக்கு இல்லாமற் போயுள்ளது. அந்த வகையில் நோக்கும் போது அரச வங்கிகளின் நிதி கொள்கைகள் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டி இருக்கிறது .

மேலும், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உயர்கல்விக்காக வெளிநாடுகளுக்கு செல்வதற்கு அரச வங்கிகள் மூலம் 1,300 மில்லியன் ரூபாவை கடனாக பெற்றுக் கொண்டுள்ளபோதும் அதனை மீளச் செலுத்த தவறியுள்ளனர்.

அத்துடன், அந்த விரிவுரையாளர்கள் உயர்கல்வியை பெற்றுக் கொள்வதற்காக வெளிநாடுகளுக்கு சென்றுள்ள நிலையில் அவர்கள் மீண்டும் தத்தமது பல்கலைக்கழகங்களுக்கு வருகை தர தவறியுள்ளார்கள். அதனால் இந்த பணத்தை அறவிடுவதற்கு பல்கலைக்கழக கட்டமைப்போ அல்லது வங்கிகளோ உரிய நடவடிக்கை எடுக்கவில்லை-என்றார்.

(அ)

# அஸ்வெசும புதிய விண்ணப்பங்கள் கோரும் பணிகள் இன்று ஆரம்பம்!

கொழும்பு, பெப். 10

4 இலட்சம் புதிய அஸ்வெசும பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரும் பணி இன்று ஆரம்பமாகிறது.

பயனாளிகளை தெரிவு செய்யும் போது பல்வேறு தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையில் சில நிபந்தனைகளை திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

குடும்பங்களைத் தேர்ந்தெடுப்பதில் பயன்படுத்தப்படும் நிபந்தனைகளின் படி யாராவது இந்தத் திட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியவில்லை என்றால், அவர்களும் இதன் மூலம் விண்ணப்பிக்கலாம்.

இதேவேளை, ஜனவரி மாதம் முதல் அமுலுக்கு வரும் வகையில் அஸ்வெசும கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

புதிதாக அடையாளம் காணப்பட்ட மாற்றுத்திறனாளிகள், முதியவர்கள் மற்றும் சிறுநீரகக் கொடுப்பனவுகளைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்களுக்கு ஏப்ரல் 1ஆம் திகதி முதல் கொடுப்பனவு வழங்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

(அ)

# பெண் பொலிஸ் துஷ்பிரயோகம் இளைஞர் ஒருவர் கைதாகினார்!

கொழும்பு, பெப். 10

பொதுப் போக்குவரத்து சேவைகளில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் மற்றும் துன்புறுத்தல்களை தடுக்கும் வகையில் பணிகளை மேற்கொண்டிருந்த பெண் பொலிஸ் உத்தியோகத்தரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரத்தினபுரி பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த இளைஞரை கொழும்பு மேலதிக நீதிவான் கெமிந்த பெரேரா முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய சந்தேக நபரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

(அ)

# தனது பாட்டியின் 14 இலட்சம் ரூபா பணத்தை திருடிய 14 வயது சிறுவன்!

கொழும்பு, பெப். 10

தனது பாட்டியின் கட்டிலுக்கு அடியில் வைக்கப்பட்டிருந்த 14 இலட்சம் ரூபா பணத்தை திருடிய குற்றச்சாட்டில் 14 வயது சிறுவன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடங்கொட பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

தொடங்கொட பிரதேசத்தை சேர்ந்த பெண் வர்த்தகர் ஒருவர் பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் முறைப்பாடளித்த பெண்ணின் 14 வயது பேரன் என தொடங்கொட பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# மூன்று முக்கிய கொடுப்பனவுகளை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானம்

கொழும்பு, பெப். 10

சிரேஷ்ட பிரஜைகள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த கொடுப்பனவை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சிறுநீரக நோயாளர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் 5,000 ரூபா கொடுப்பனவை 7,500 ரூபாவாக அதிகரிக்கவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும், சிரேஷ்ட பிரஜைகளுக்கு வழங்கப்படும் 2,000 ரூபா உதவித்தொகை 3,000 ரூபாவாக உயர்த்தப்படவுள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் அமுலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வகைகளுக்குள் உள்ள ‘அஸ்வெசும’ நலன்புரிப் பலன்களைப் பெறுபவர்கள் ஏப்ரல் 01, 2024 முதல் அதிகரிப்பைப் பெறுவார்கள் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# பெண்களிடம் சேட்டை; யாழில் இருவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ்ப்பாணத்தில் பேருந்தில் பெண்களிடம் தவறாக நடந்து கொண்ட குற்றச்சாட்டில் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் இருவரும் அராலி பகுதியை சேர்ந்த 22 மற்றும் 24 வயதுடைய இளைஞர்கள் என பொலிஸார் தெரிவித்தனர் .

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் இருந்து புறப்பட்ட பஸ்ஸில் சாதாரண உடையில் இருந்த பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் குறித்த இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதான இருவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்து உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# ஜனாதிபதித் தேர்தல் தீர்மானம் அரசமைப்புக்கு எதிரான செயல்!

## சுமந்திரன் எம். பி.



கொழும்பு, பெப். 10

அரசமைப்பு சட்டங்கள் சொல்கின்றன. காலத்துக்கு காலம் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை தேர்தல்கள் நடத்தப்படாமல் உள்ளன. ரணில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று தீர்மானித்திருக்கிறார். இது ஜனநாயகத்துக்கும் அரசமைப்புக்கும் எதிரான ஒரு மீறலாகும் - என்று பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் பாராளுமன்ற அமர்வில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், ஜனாதிபதி ரணில் இந்த ஆண்டை தேர்தல் ஆண்டாக அறிவித்துள்ளார். தேர்தல் திகதிகளை அவர் தீர்மானிப்பது போல தெரிகின்றது. இது குடியரசுநாடு, சர்வாதிகார ஆட்சியல்ல. அரசமைப்பு சட்டங்கள் சொல்கின்றன. காலத்துக்கு காலம் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை தேர்தல்கள் நடத்தப்படாமல் இருக்கிறது. அவர் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று தீர்மானித்திருக்கிறார். இது ஜனநாயகத்துக்கும் அரசமைப்புக்கும் எதிரான ஒரு மீறுகையாகும்.

உங்களால் இந்த நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது. அரசாங்க கொள்கை என்று சொல்லிக் கொண்டு உங்களுக்கு வேண்டியதை எல்லாம் நீங்கள் சொல்லலாம். அவர் இந்த சபைக்கு வந்து சொன்னார். முதலில் இனப்பிரச்னையை தீர்க்க வேண்டும் என்று சொன்னார். எல்லோரும் கைகளை உயர்த்தி அதைச் செய்வோம் என்றீர்கள். இதையே 75 ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னரும் செய்வதாக சொல்லியிருந்தார். இப்போது 76ஆவது சுதந்திர தினமும் கடந்து விட்டது. நேற்றைய பேச்சிலே ஜனாதிபதி அவர்கள் அதைப் பற்றி ஒரு சொல் கூட இந்த சபையிலே அவர் பேசவில்லை. தான் பதவியேற்றபோது அவர் இந்த சபைக்கும் மக்களுக்கும் முதலாவதாக சொன்னது, உடனடியாக இனப் பிரச்னைக்கான தீர்வை நாங்கள் கண்டு கொள்வோம். 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலே இந்த சபையிலே அனைவரையும் சேர்த்து அனைத்துக் கட்சி மாநாடுகளையும் 3 தடவைகள் கூட்டி 75 ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னதாக தீர்க்கப்படும் என்று பறைசாற்றியிருந்தார்.

அப்போது அவர் எங்களை அழைக்கும் போதே சொன்னோம். இது வெறும் வார்த்தைகள். இதை செய்ய அவருக்கு அரசியல் பலம் கிடையாது. இனப்பிரச்னைக்கான தீர்வை எதிர்ப்பவர்களை பாராளுமன்றத்தில் போலிப் பெரும்பான்மையோடு வைத்துக் கொண்டு ஜனாதிபதியால் இதை செய்ய முடியாது. வெறும் வார்த்தை ஜாலங்களால் எங்களை ஏமாற்றுகின்றார். ஆனாலும், நாங்கள் இதற்கு தடங்கலாக இருந்தோம் என்று சொல்வதற்கு இடம் கொடுக்க கூடாது என்பதற்காக நாங்கள் அனைத்துக் கூட்டங்களுக்கும் போனோம். எங்களுடைய ஒத்துழைப்பு முழுமையாக இருக்கும் என்பதை வெளிப்படுத்தினோம். அப்படி செய்திருந்தும் கூட எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

3 அல்லது 4ஆவது கூட்டத்திலே எங்களுடைய கட்சித் தலைவர் சம்பந்தன் சொன்னார். இந்தக் கூட்டங்களிலே எடுக்கப்படுகிற முடிவுகளிலே ஒரேயொரு முடிவுதான் நடைமுறைப்படுத்தப் படுகின்றது - என்றார்.

அது என்னவென்றால் அடுத்த கூட்டத்துக்கான திகதி தான் அது என்றார். அது மட்டும்தான் அமுல்படுத்தப்படுகின்றது என்று சம்பந்தன் சொல்லியிருந்தார். ஜனாதிபதி ரணில் இப்படிச் சொல்லிச் சொல்லி செல்வதே தன்னுடைய பழக்கமாக கொண்டிருப்பதால் இந்த விடயத்தை முற்றிலும் மறுதலித்தவராக அரசாங்க கொள்கை பிரகடனத்தை உரையாற்றியிருக்கின்றார். இதனை முற்று முழுதாக நிராகரிக்கின்றோம் - என்றார்.

(அ)

# தேசிய மக்கள் சக்தி மேற்கொள்ளும் இந்திய விஜயம் வரவேற்கத்தக்கது!

## பாராட்டுகின்றது ஐக்கிய தேசிய கட்சி

கொழும்பு, பெப். 10

**தேசிய மக்கள் சக்தியின் இந்திய விஜயம் வரவேற்கத்தக்கது என ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.**




அவரது கட்சி, தற்போதைய அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் என தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய மக்கள் உலக தலைவர்களுடன் இணைந்து பணியாற்றுவது நல்ல விடயமாகும். நாட்டின் கொள்கைகளை உருவாக்குவதற்கு, தேசிய மக்கள் சக்தி தமது பங்களிப்பை வழங்கும்.

இது புதிய விடயம் ஒன்றல்ல. கடந்த காலத்திலும் தேசிய மக்கள் சக்தி மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன, சந்திரிக்கா குமாரதுங்க மற்றும் மகிந்த ராஜபக்ஸ ஆகியோரின் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றியுள்ளது.

2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்திற்கு ஜே.வி.பி ஆதரவு வழங்கியுள்ளது.

அந்த வகையில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கத்திற்கும் ஜே.வி.பியின் கூட்டணியான தேசிய மக்கள் சக்தி ஆதரவு வழங்கும்-என்றார். (அ)

# தமிழ் அரசியல் கைதி மீது தாக்குதல்: விசாரணைக்கு 2 குழுக்கள் நியமனம்

கொழும்பு, பெப். 10

தமிழ் அரசியல் கைதி ஒருவரை முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவர் தாக்கியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரதீபன் என்ற தமிழ் அரசியல் கைதி, சிறைச்சாலைக்குள் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது தாக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படும் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகச் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் இந்த விடயம் தொடர்பில் சிறைச்சாலைகளுக்குப் பொறுப்பான அமைச்சர் விஜேதாசவின் கவனத்திற்குக் கொண்டுவந்ததை அடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உதவிப் பொலிஸ் கண்காணிப்பாளர் ஒருவர் தலைமையில் ஒரு குழு விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில், மெகசின் சிறைச்சாலை அதிகாரிகளை உள்ளடக்கிய குழு ஒன்றும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகச் சிறைச்சாலைகள் திணைக்கள ஊடகப் பேச்சாளர் காமினி பி. திசாநாயக்க தெரிவித்தார். (அ)

# விவசாயிகளிடம் இருந்து நெல்லை கொள்வனவு செய்ய விலை நிர்ணயம்!

கொழும்பு, பெப். 10

பெரும்போக நெற்செய்கையின் போது அறுவடை செய்யப்பட்ட நெல்லை விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்வதற்கு விவசாய அமைச்சு விலை நிர்ணயம் செய்துள்ளது.

இதன்படி, 14 சதவீதம் வெப்பத்தன்மையை கொண்ட ஒரு கிலோகிராம் நாடு அரிசியை 105 ரூபாவுக்கும், ஒரு கிலோகிராம் சம்பா அரிசியை 120 ரூபாவுக்கும் கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோகிராம் கீரி சம்பாவை 130 ரூபாவுக்கு கொள்வனவு செய்வதற்கு விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

அத்துடன், வெப்பத்தன்மை 14 சதவீதத்தை விட அதிகமாக காணப்படும் ஒரு கிலோகிராம் நாடு அரிசியை 90 ரூபாவுக்கும், ஒரு கிலோகிராம் சம்பா அரிசியை 100 ரூபாவுக்கும், ஒரு கிலோகிராம் கீரி சம்பா அரிசியை 120 ரூபாவுக்கும் கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக சிறு, மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு அதிகபட்சமாக 50 மில்லியன் ரூபாயும், அரிசி சேகரிப்பாளர்களுக்கு 25 மில்லியன் ரூபாயும் வழங்கப்படவுள்ளது. (அ)

# பெண்களுக்கு எதிரான வன்முறையில் ஈடுபடுவோருக்கு 5 ஆண்டுகள் சிறை!

கொழும்பு, பெப். 10

பொதுப்போக்குவரத்தில் பெண்களுக்கு பாலியல் ரீதியான தொல்லைகள் மற்றும் அவர்களுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபடுவோருக்கு 5 ஆண்டுகளுக்கு மேல் சிறை தண்டனை வழங்குவதற்கான வாய்ப்புள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குற்றவியல் சட்டத்தின் 345ஆம் பிரிவுக்கு அமைய, இந்த சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும் என பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

பொதுப்போக்குவரத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபடுவோர் தொடர்பில் சந்தேகம் ஏற்படும் பட்சத்தில், சிவில் உடையில் உள்ள காவல்துறையினர் அவர்கள் தொடர்பில் கண்காணிப்பதுடன், தமது கமராக்கள் மூலம் அதனை சாட்சியமாக பதிவு செய்வார்கள்.

பின்னர், அவர்கள் கைது செய்யப்பட்டு உரிய சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள்.

இதேவேளை, எவரேனும் ஒருவர், போலியான முறைப்பாடுகளை வழங்குவாராயின் அவருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

அத்துடன், போலி முறைப்பாடுகளின் ஊடாக எந்தவொரு நபரேனும் பாதிக்கப்படுவாராயின், அது விசாரணையின் பின்னர் உறுதிப்படுத்தப்பட்டால், அவர்கள் தமக்கு ஏற்பட்ட அசௌகரியத்திற்காக இழப்பீட்டை பெற்றுக்கொள்ள முடியும் என பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொதுப் போக்குவரத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் ரீதியான தொல்லைகள் மற்றும் வன்முறைகளில் ஈடுபடுவோர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட சோதனையின் போது, இது வரை 42 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# குடாநாட்டு குடிதண்ணீர் தேவையை பூர்த்தி செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார்!

## வடக்கு ஆளுநரிடம் நெதர்லாந்தின் துணைத்தூதுவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 10

நெதர்லாந்து நாட்டின் இலங்கைக்கான துணைத்தூதுவர் இவன் ருட்ஜென்ஸ், வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை சந்தித்து கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள வடமாகாண ஆளுநர் செயலகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது வட மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் ஆளுநர் துணைத்தூதுவருக்கு தெளிவுபடுத்தினார்.

அவ்விடயங்களை கேட்டறிந்த இவன் ருட்ஜென்ஸ் குடாநாட்டுக்கான குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்கத் தயார் என கூறியுள்ளார்.



அத்துடன் முதலீட்டுத் திட்டங்களை ஊக்குவித்து வடமாகாண அபிவிருத்திக்குத் தேவையான பங்களிப்பை வழங்கவும் தயாராக உள்ளதாகவும் அவர் உறுதியளித்தார். (அ)

# ஆஸி. வெளியுறவு அமைச்சரை சந்தித்தார் ஜனாதிபதி ரணில்!

பேர்த், பெப். 10

அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடைபெறும் 7ஆவது இந்து சமுத்திர மாநாட்டுடன் இணைந்ததாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பெனி வோங்கிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் இடம்பெற்றது.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் சார்பில், இலங்கை ஜனாதிபதியை மரியாதையுடன் வரவேற்ற அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர், இந்த மாநாட்டுக்கு இலங்கை வழங்கிய சிறப்பான ஆதரவையும் பாராட்டினார்.

இந்து சமுத்திரம் தொடர்பில் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு மற்றும் பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளுடன் தற்போதுள்ள ஒத்துழைப்பு குறித்தும் அமைச்சர் விளக்கினார்.

இந்து சமுத்திர வலய நாடுகள் சங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் முக்கியத்துவத்தை வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இந்து சமுத்திரத்தை நோக்கி அதிகாரத் தளங்கள் மாறுவதன் மூலம், பிராந்தியத்தில் அவுஸ்திரேலியாவுடனான உறவுகளை மேம்படுத்துவது ஒரு முக்கியமான படியாகும் என்று சுட்டிக்காட்டினார்.

புதுப்பிக்கத்தக்க வலுசக்தித் துறையில் இலங்கையில் காணப்படும் புதிய முதலீட்டு வாய்ப்புகள் குறித்தும் விளக்கமளித்த ஜனாதிபதி, அத்துறையில் ஏற்கனவே பல அவுஸ்திரேலிய நிறுவனங்கள் முதலீடுகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

“கொழும்பு முறைமை” வரையிலான இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான வரலாற்று உறவுகள் குறித்து இங்கு நினைவுகூரப்பட்டதுடன், பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் முதலீடு உள்ளிட்ட பல புதிய துறைகளின் ஊடாக இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சரும் கலந்துரையாடினர்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, அவுஸ்திரேலியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சித்ராங்கனி வாகீஷ்வர, ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் சாண்ட்ரா பெரேரா, ஜனாதிபதியின் சர்வதேச உறவுகள் பணிப்பாளர் தினுக் கொழும்பகே மற்றும் ரிஷான் டி சில்வா ஆகியோர் இதன்போது உடனிருந்தனர். (அ)

# யாழ். பல்கலை பட்டமளிப்பு மார்ச்சில்

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 38ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவை மார்ச் மாதம் 14,ஆம்15மாம்,16 ஆம் திகதிகளில் நடத்த பல்கலைக் கழக நிர்வாகத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.




இந்நிலையில் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற தகுதியானவர்களின் விவரங்கள் பல்கலைக் கழக இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

மேலதிக விவரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தை பார்வையிட முடியும்.

https://www.jfn.ac.lk/38th-convocation-graduands-list/

(அ)

# அவுஸ்திரேலியா வாழ் இலங்கையரை சந்தித்து பேசினார் ஜனாதிபதி ரணில்

பேர்த், பெப். 10

**நாட்டை மீளக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்துடன் தொடர்ச்சியாக இணைந்து கொள்ளுமாறு அவுஸ்திரேலியா வாழ். இலங்கையர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவுஸ்திரேலிய பேர்த் நகரில் வசிக்கும் அவுஸ்திரேலியா வாழ் இலங்கையர்களை நேற்று வெள்ளிக்கிழமை சந்தித்து கலந்துரையாடினார்.

இலங்கைப் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவது மற்றும் நவீனமயப்படுத்துவது குறித்து புலம்பெயர் இலங்கையர்களுக்கு அறிவுறுத்திய ஜனாதிபதி, அவற்றுடன் தொடர்ச்சியாக இணைந்துகொள்ளுமாறும் அவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

இலங்கையைக் கட்டியெழுப்ப அரசாங்கம் ஆரம்பித்திருக்கும் வேலைத் திட்டத்தைப் பாராட்டிய புலம்பெயர் இலங்கையர்கள், காலநிலை, சுற்றுலா உள்ளிட்ட துறைகளின் அபிவிருத்திக்காக அரசாங்கம் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்பதாகவும் தெரிவித்தனர்.

இதன்போது புலம்பெயர் இலங்கையர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த ஜனாதிபதி, நாட்டின் முன்னேற்றதிற்காக நீண்டகால கொள்கைத் திட்டங்களைச் செயற்படுத்த அரசாங்கம் அர்பணிப்புடன் செயற்படும் என்றும் தெரிவித்தார்.

தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவுதல் உள்ளிட்ட புதிய கல்வி மறுசீரமைப்புத் திட்டங்கள் தொடர்பிலும் ஜனாதிபதி இதன்போது தெளிவூட்டினார்.

புலம்பெயர் இலங்கையர்களுக்கான அலுவலகம் ஒன்றை பேர்த் நகரில் ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக இங்கு சுட்டிக்காட்டிய தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, இலங்கை புலம்பெயர் சமூகம் அதனூடாக அரசாங்கத்துடன் வலுவான முறையில் தொடர்புகளைப் பேண முடியும் என்றும் தெரிவித்தார்.

கடந்த வருடம் வெளியிடப்பட்ட நிர்வாக தீர்மானங்கள் தொடர்பான அறிக்கை உட்பட சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து விளக்கமளித்த சாகல ரத்நாயக்க, இந்த மறுசீரமைப்பு வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு புலம்பெயர் இலங்கையர்களின் ஆதரவை தொடர்ந்தும் வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்காக வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்தவர்களின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்ள அரசாங்கம் ஆரம்பித்திருக்கும் வேலைத்திட்டம் குறித்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரியும் இங்கு விளக்கமளித்தார்.

அவுஸ்திரேலியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகள் சித்ராங்கனி வாகீஷ்வர, பாராளுமன்ற உறுப்பினர் சிந்தக மாயாதுன்ன, மேற்கு அவுஸ்திரேலியாவின் இலங்கை கொன்ஸூலர் ஜெனரல் உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

(அ)

# சாந்தனுக்கு கடவுச்சீட்டு அனுப்பி வைக்கப்பட்டது

கொழும்பு, பெப். 10

சாந்தனை நாட்டுக்கு அழைத்து வருவதற்காக, அவருக்குரிய கடவுச்சீட்டு தேவைப்பட்ட நிலையில், இலங்கை குடிவரவு குடியகல்வு சட்டதிட்டங்களின் அமைவாக அவருக்குரிய கடவுச்சீட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்திய வெளியுறவுத்துறைக்குச் சாந்தனுடைய கடவுச்சீட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை வெளியுறவு அமைச்சால் அறியத்தரப்பட்டுள்ளது.

இதன்படி, சாந்தன் இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் பயணம் செய்வதற்கான ஏற்பாடுகள் வரும் நாட்களில் இந்திய அரசு தரப்பினால் மேற்கொள்ளப்படவுள்ளன.

# புதிய கல்வி சீர்திருத்த செயற்றிட்டம் வடக்கில் இரு பாடசாலைகள் தெரிவு

கொழும்பு, பெப். 10

புதிய கல்வி சீர்திருத்தத்தின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ள செயற்றிட்டமொன்றுக்கு வட மாகாணத்தில் இருந்து 2 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ், யுனிசெப்பின் நிதி அனுசரணையுடன் தரம் 8-11 வரையான மாணவர்களுக்கு எண்ணிம குடியுரிமைத் திறன்கள் கற்கைநெறியானது அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

குறித்த முன்னோடித் திட்டத்திற்கு ஒவ்வொரு மாகாணத்தில் இருந்தும் 2 பாடசாலைகள் வீதம் 18 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு, அப்பாடசாலைகளைச் சேர்ந்த 18 ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் வட மாகாணத்தில் இருந்து வவுனியா கனகராயன்குளம் மகாவித்தியாலயமும், முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் மகாவித்தியாலயமும் குறித்த திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, குறித்த செயற்றிட்டமானது இந்த வருடம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரணில் ஒரு பொருட்டல்ல!

கொழும்பு, பெப். 10

தேர்தல்களில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு பொருட்டல்ல என்றும் ஆனால் தங்கள் கட்சிக்கு உண்மையான சவால் தேசிய மக்கள் சக்திதான் என்றும் ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க, அரசியல் நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்ட போது இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

“ஐக்கிய மக்கள் சக்தியை பொறுத்தவரை எதிர்வரும் தேர்தல்களில் வெற்றி பெறும் நம்பிக்கையுடன் களமிறங்கத் தயாராக இருக்கின்றோம்.

எங்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தரப்புஒரு பொருட்டல்ல. அவர்களை நாங்கள் சவாலாகப் பார்க்கவில்லை. ஆனால் தேசிய மக்கள் சக்தியினரே உண்மையில் எங்களுக்குச் சவாலாக எழுச்சி பெற்றுள்ளார்கள்.

இருந்தும் பொதுமக்கள் ஆதரவுடன் எங்கள் கட்சியே பெரும்பான்மை வெற்றியைப் பெறும்” என்றும் தெரிவித்தார்.

# அம்பனில் சட்டவிரோத மணல் அகழ்வை நிறுத்துமாறு கோரி மக்கள் போராட்டம்!

யாழ்ப்பாணம், பெப். 10

வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில் நீண்ட காலமாக இடம்பெற்று வரும் சட்டவிரோத மணல் அகழ்வை நிறுத்துமாறு கோரி பொதுமக்கள் போராட்டம் நடத்தினர்.

நேற்றுக் காலை 9 மணியளவில் அம்பன் பிரதேச வைத்தியசாலை முன் ஆரம்பமான இந்த போராட்டப் பேரணி மணல் அகழ்வு இடம்பெறும் இடத்தை நோக்கி சென்றது.

இதில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன் மற்றும் இளைஞர்கள் கலந்து கொண்டு மணல் அகழ்வை நிறுத்துமாறு கோஷமிட்டனர்.

2010ஆம் ஆண்டிலிருந்து இதுவரை சுமார் ஆயிரம் ஏக்கர் பரப்பில் சட்டத்துக்கு முரணாக மணல் அகழ்ந்தெடுக்கப்பட்டு வருகிறது.

(அ)



# அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்கள்!

## சார்ள்ஸ் நிர்மலநாதன் வலியுறுத்தல்




கொழும்பு, பெப். 10

தமிழர் பிரதேசங்களில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெறும் செயற்பாடுகள் தொடர்பில் கொள்கை பிரகடன உரையில் ஜனாதிபதி அவதானம் செலுத்தாமல் இருந்தமை கவலைக்குரியது.விட்டுக் கொடுப்புடன் முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.அவ்வாறாயின் ஆனந்த சுகாதரன் போன்ற அரசியல் கைதிகளை மனிதாபிமானத்துடன் விடுதலை செய்ய வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரையின் மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார பாதிப்பை மையப்படுத்தியதாக ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரை அமைந்திருந்தது.இந்த நாட்டில் தமிழர்களுக்கு எதிரான இன ரீதியிலான ஒடுக்குமுறை தொடர்ச்சியாக இடம்பெறுகிறது.தமிழர்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்றன. தமிழர்களின் கலாச்சார உரிமைகள் அழிக்கப்படுகின்றன.இவை தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்தாமல் இருப்பது கவலைக்குரியது.காணி உரிமை தொடர்பில் ஜனாதிபதி பேசியிருந்தார். 2 மில்லியன் மக்களுக்குக் காணி உரிமை வழங்கியதாகக் குறிப்பிட்டிருந்தார்.

மன்னார் மாவட்டத்தில் திருக்கேதீஸ்வரர் கிராமத்தில் உள்ள மக்களின் சொந்த காணிகளை, வனவளத்திணைக்களம் தமக்குச் சொந்தமானது என்று குறிப்பிட்டுக் கொண்டு அடையாளப்படுத்தல் தூண்களை நாட்ட முயல்கிறது. மக்களுக்குக் காணி உரிமை வழங்குவதாக ஜனாதிபதி பெருமையாகப் பாராளுமன்றத்தில் உரையாற்றுகின்ற போது மன்னார் மாவட்டத்தில் மக்களின் விவசாய காணிகள் அரச திணைக்களத்தால் அபகரிக்க முயற்சிக்கிறது. மக்களின் கடும் எதிர்ப்பை தொடர்ந்து வனவளத்துறை திணைக்களம் காணி அபகரிப்பு முயற்சியைத் தற்காலிகமாகக் கைவிட்டுள்ளது.

காணி விடுவிப்பு விவகாரத்தில் ஜனாதிபதி ஒன்றைக் குறிப்பிடுகிறார், அரச அதிகாரிகள் அதற்கு மாற்றீடாக செயற்படுகிறார்கள். இவ்வாறன செயற்பாடுகள் குறித்து ஜனாதிபதி அவதானம் செலுத்தாமல் இருப்பது கேள்விக்குரியது.

யுத்த காலத்தில் பலர் அரசியல் கைதிகளாக பலர் கைது செய்யப்பட்டார்கள்.ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல அரசியல் கைதிகளை விடுதலை செய்துள்ளார்.அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். மிகுதியாக உள்ள அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும் என்பதைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆனந்த சுதாகரன் என்ற அரசியல் கைதியின் மனைவி 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உயிரிழந்தார். தனது மனையின் இறுதி சடங்குக்கு ஆனந்த சுகாதகரன் சென்றிருந்த வேளை அவரது மகள் தானும் அப்பாவுடன் சிறைக்குச் செல்கிறேன் என்று குறிப்பிட்ட அவருடன் செல்ல முற்பட்டமை அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆனந்த சுதாகரனின் பிள்ளைகளை அழைத்து,அவரை விடுதலை செய்வதாக வாக்குறுதி வழங்கியிருந்தார். ஆனால் இன்று வரை அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை-என்றார்.

# யானை - மனித மோதலை தடுக்க கோரி மனு தாக்கல்

அம்பாறை, பெப். 10

**யானை - மனித மோதலை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி எழுத்தாணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக நீதிக்கான மய்யம் அமைப்பின் தலைவர் சட்டத்தரணி ஷஃபி எச்.இஸ்மாயில் தெரிவித்துள்ளார்.**

யானை - மனித மோதலை தடுக்க நீதிக்கான மய்யம் மேற்கொண்ட சட்ட நடவடிக்கை தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும்போதே மாநாடு நீதிக்கான மய்யத்தின் சாய்ந்தமருது காரியாலயத்தில் வைத்து மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசமானது யானைகள் வாழ்கின்ற பிராந்தியம் அல்ல. குறிப்பிட்ட காலங்களில் அம்பாறை மாவட்டத்தினுள் வருகின்ற யானைகள் அம்பாறை மாவட்ட யானைகள் இல்லை. வெளிமாவட்டங்களில் இருந்து கொண்டுவரப்பட்டு யானைகள் இங்கு விடப்படுவதான குற்றச்சாட்டு ஆராயப்பட வேண்டியுள்ளது.

தற்போது இவ்விடயம் பாரிய பிரச்சினைகளை உருவாக்கியுள்ளதுடன், அம்பாறை மாவட்டத்தில் நீண்ட காலமாக நிலவி வரும் யானை-மனித மோதலுக்கான தீர்வு பெற்றுக் கொள்ளப்படவில்லை. இதனால் யானை-மனித மோதலை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி எழுத்தாணை மனு தாக்கலை எமது அமைப்பு மேற்கொண்டுள்ளது. மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எழுத்தாணை மனுவொன்று கடந்த திங்கட்கிழமை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதன்படி கடந்த 5 வருடங்களில் யானைகளின் தாக்குதலினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையில் கிழக்கு மாகாணம் இரண்டாவது இடத்தில் காணப்படுகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் உயிரிழப்பு அதிகமாக காணப்படுவதாகவும் இதற்கு தீர்வு வழங்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எழுத்தாணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சுற்றாடல் அமைச்சு, வனஜீவராசிகள் திணைக்களம் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்கு எதிராக எமது அமைப்பு குறித்த எழுத்தாணை மனுவை தாக்கல் செய்துள்ளது- என்றார்.

(அ)

## கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பொங்கல்



மட்டக்களப்பு, பெப். 10

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 'எழுச்சிப் பொங்கல் விழா - 2024' நேற்று முன் தினம் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது. மாணவர்களின் ஏற்பாட்டில் பல்கலைக் கழக சமூகம் ஒன்றிணைந்து நடத்திய இந்நிகழ்வின் பிரதம அதிதியாக உபவேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கம் கலந்து கொண்டார்.

108 பானைகளில் பொங்கல், பாரம்பரிய விளையாட்டு மற்றும் கலை நிகழ்வுகளை முன்னெடுக்கும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட இப்பொங்கல் விழாவில் பிரதி உபவேந்தர் கலாநிதி பிரபாகரன், கிழக்குப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் வினோவபா, விவசாய பீட பீடாதிபதி பேராசிரியர் திருமதி புனிதா பிரேமானந்த ராஜா, வர்த்தக முகாமைத்துவ பீட பீடாதிபதி பேராசிரியர் ராஜேஸ்வரன், கலை கலாசார பீட பீடாதிபதி கலாநிதி குணபாலசிங்கம் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டார்கள். பல்கலைக்கழக பதிவாளர் பகிரதன், நிதியாளர் பாரிஸ் மற்றும் கல்விசார், நிர்வாக, கல்விசாரா அத்துடன் மாணவர்களின் பங்குபற்றலுடன் வெகு விமர்சையாக இது நடைபெற்றது.

இதன்போது பல்கலைக்கழக மாணவர்களின் நடனம், கிளி இசை, குழு நடனம், குழுப் பாடல், சிங்களப் பாடல், கண்டிய நடனம் உட்பட பல்வேறு நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கல்முனை கடற்கரை பிரதேசத்தில் அழியாத திண்மக் கழிவுகள் சிரமதானம் மூலம் சேகரிப்பு



அம்பாறை, பெப். 10

அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக ஆறு மற்றும் குளங்களிலுள்ள நீர் கடலில் கலந்ததன் காரணமாக கடற்கரையோரங்களில் பிளாஸ்டிக் போன்ற உக்காத திண்மக் கழிவுகள் பெருமளவில் சேர்ந்து காணப்பட்டது.

இதன் காரணமாக கரைவலை மீன்பிடியில் ஈடுபடுவோரும், பொழுது போக்கிற்காக கடற்கரையோரங்களுக்கு செல்வோரும் பலவிதமான இன்னல்களுக்கு உள்ளாகி வந்தனர்.

இதனை கருத்திற் கொண்டு கல்முனை இளைஞர் அமைப்பும் பிரதேச மக்களும் விஷ்னு கோயிலுக்கு முன்பாக சிரமதான பணியில் ஈடுபட்டிருந்தனர்.

பெண்கள் சிலர் கையில் பதாதைகளை ஏந்தி சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருப்பது சம்பந்தமாக விழிப்புணர்வை ஏற்படுத்தியிருந்தனர்.

## மேம்பட்ட சுகாதார சேவைகளை எமது பிராந்தியத்தில் வழங்க அர்ப்பணிப்புடன் பணியாற்ற முன்வர வேண்டும்

### வைத்திய கலாநிதி சஹீலா இஸ்ஸதீன்



அம்பாறை, பெப். 10

மேம்பட்ட சுகாதார சேவைகளை எமது பிராந்தியத்தில் வழங்க ஊடகங்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்ற முன்வர வேண்டும் என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சஹீலா இஸ்ஸதீன் தெரிவித்தார்.

மணிக்கு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சஹீலா இஸ்ஸதீன் கலந்து கொண்ட ஊடகவியலாளர்களுடனான கலந்துரையாடல் கல்முனையில் இடம்பெற்றது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.சி.எம்.மாஹிரும் கலந்து கொண்டார்.

இங்கு வைத்திய கலாநிதி சஹீலா இஸ்ஸதீன் உரையாற்றுகையில்,

இப்பிராந்தியத்தில் பாதுகாப்பான, ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.

மக்கள் சுகாதாரத்துறையினருக்கு முழுமையான ஒத்துழைப்பினையும், ஆதரவினையும் வழங்கும்போதுதான் மேம்பட்ட சுகாதார சேவைகளை எமது பிராந்தியத்தில் பெற்றுக்கொள்ள முடியும். இதற்காக ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த காலத்தில் குறிப்பாக கொரோனா காலத்தில் இரவு பகலாக ஊடகவியலாளர்கள் பணியாற்றியதை ஞாபகப்படுத்தி நினைவு கூர்வதுடன் அவர்களுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது பிராந்திய சுகாதாரத் துறையின் முன்னேற்றத்திற்காக ஊடகவியலாளர்களின் ஆரோக்கியமான கருத்துக்களையும் எதிர்பார்க்கின்றோம். சுகாதார மேம்பாட்டை முன்னெடுப்பதில் பல சவால்களும் உள்ளது. அந்த சவால்களை வெற்றி கொள்ள மக்களை விழிப்பூட்டுவற்காக ஊடகவியலாளர்கள் சிரத்தையுடன் பணியாற்ற வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன்.

சுகாதாரத்துறையின் எழுச்சிக்காக பல்வேறு தரப்பினருடனும் தொடரான கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றோம். அந்த வகையில் தான் பெறுமதிமிக்க ஊடகவியலாளர்களையும் சந்திக்கின்றோம் -என்றார்.

(அ)

# மட்டக்களப்பில் பாண் எடை தொடர்பான சுற்றிவளைப்பு!

மட்டக்களப்பு, பெப். 10

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாண் எடை தொடர்பான விசேட சுற்றி வளைப்புக்கள் பரவலாக இடம்பெற்று வருகின்றன.

பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபையினால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க விற்பனைக்காக தயாரிக்கப்படும் பாண்களின் நிறை குறித்து வர்த் தக நிலையங்களை பரிசோதனை செய்யும் நடவடிக்கைகள் நாடு பூராகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க மட்டக்களப்பு மாவட்டத்திலும் மட்டக்களப்பு நகர், காத்தான்குடி, ஆரையம்பதி, ஏறாவூர் மற்றும் ஓட்டமாவடி ஆகிய நகரப் பிரதேசங்களில் இயங்கும் ஹோட்டல்கள் மற்றும் வெதுப்பகங்களில் பாண்களின் எடை தொடர்பான சுற்றிவளைப்புக்கள் மாவட்ட பாவனையாளர் அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டதாக அதன் மாவட்டப் பொறுப்பதிகாரி என். எம். சப்ராஸ் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர் பெப்ரவரி 5ஆம் திகதி கடந்த திங்கட்கிழமை தொடக்கம் நேற்று பி.ப. 4.00 மணி வரை 30இற்கும் மேற்பட்ட ஹோட்டல்கள் மற்றும் வெதுப்பகங்கள் பரிசோதனை செய்யப்பட்டதுடன், குறைந்த நிறையில் பாண்களை விற்பனை செய்த 11 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பாண்களின் விலைகளை வெளிப்படுத்தாமை, முறையான லேபல் இடப்படாமை போன்ற குற்றங்களுக்காக 05 பாண் விற்பனையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய ஒரு இறாத்தல் பாண் 450கிராம் காணப்பட வேண்டும் என்பதுடன் அவசியமாயின் 13.5கிராம் நிறை குறைவிற்கும் அரை இறாத் தல் பாண் 225கிராம் 9 கிராம் எடைக் குறைவிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பொதி செய்யப்பட்ட, சேமித்து வைக்கப்பட்ட, விற்பனைக்கு வழங்கப்படும், விற்பனைக்காகக் காட்டப்படும் அல்லது சில்லறை அல்லது மொத்தமாக விற்கப்படும் தயாரிக்கப்பட்ட எந்த வகைப் பாணும் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையான எடையைக் கொண்டிருக்க வேண்டும் என பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அறிவித்துள்ளது.

(அ)

# ஹூதி போராளிகளின் இலக்கு மீது தாக்குதல்!

## 7 ஏவுகணைகளை தாக்கி அழித்த அமெரிக்கா



நியூயோர்க், பெப். 10

**யேமனில் உள்ள ஹூத்தி போராளிகளின் இலக்குகள் மீது அமெரிக்கா மீண்டும் விமான தாக்குதலை நடத்தியுள்ளது.**

பாதுகாப்பு நடவடிக்கையாக ஹூத்தி போராளிகளுக்கு சொந்தமான மாலுமிகள் இல்லாத நான்கு கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தியதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

செங்கடலில் பயணிக்கும் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்த தயாராக வைக்கப்பட்டிருந்த 7 ஏவுகணைகளை தாக்கி அழித்ததாகவும் அமெரிக்க இராணுவம் கூறியுள்ளது.

செங்கடலில் பயணிக்கும் சர்வதேச வர்த்தக கப்பல்கள் மீது ஹூத்தி போராளிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதனால், சர்வதேச வர்த்தக கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதுடன் இதனால், வர்த்தக கப்பல்கள் ஆபிரிக்காவின் நன்நம்பிக்கை முனையை கடந்த பயணித்து வருகின்றன.

இதன் காரணமாக கப்பல் நிறுவனங்களின் செலவுகள் அதிகரித்துள்ளன. சர்வதேச வர்த்தகத்திற்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

காஸா மீது இஸ்ரேல் மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கையை கண்டிக்கும் வகையில் செங்கடலில் பயணிக்கும் இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு ஆதரவான நாடுகளின் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தி வருவதாக ஹூத்தி போராளிகள் அமைப்பு கூறியுள்ளது.

இதனால், அமெரிக்க மற்றும் பிரித்தானிய படையினர் இணைந்து ஹூத்தி போராளிகளின் இலக்குகள் மீது தொடர்ந்தும் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

மேலும் ஹவுதி அமைப்பை இந்நாடுகள் மீண்டும் பயங்கரவாத அமைப்புகள் பட்டியலில் சேர்த்துள்ளன.

(அ)

# பணவீக்கத்தில் சிக்கும் பல ஐரோப்பிய நாடுகள்

## உணவு வீண்விரயத்தை தவிர்க்கும் பிரான்ஸ்

பாரிஸ், பெப். 09

பல ஐரோப்பிய நாடுகளில் பணவீக்கம் முக்கிய பிரச்னையாக காணப்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. பத்து ஐரோப்பிய நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட அண்மைய கருத்துக்கணிப்பில் படி இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் பிரான்ஸின் பணவீக்கம் 4.9 வீதத்தை எட்டிய நிலையில், பல குடும்பங்கள் தமது உணவுக்கான வரவு-செலவுகளை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரான்ஸை தளமாகக் கொண்டியங்கும் செடெலெம் நுகர்வோர் கடன் நிறுவனத்திற்காக நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பின் படி, 87 வீத குடும்பங்கள் உணவுக் கழிவை மட்டுப்படுத்தியுள்ளதாக தெரியவந்துள்ளது.

2023 ஆம் ஆண்டு ஒவ்வொரு குடும்பமும் தமது வரவு - செலவுத் திட்டங்களில் அதிக கவனம் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, சுமார் 41 வீதமானவர்கள் 2022 ஆம் ஆண்டில் உணவுக்கான செலவீனத்தை விட 2023 ஆம் ஆண்டில் குறைந்த தொகையை செலவிட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இதனிடையில், வட ஐரோப்பியர்களை விட தென் ஐரோப்பியர்கள் பணவீக்கத்தின் விளைவுகளை அதிகம் உணர்வதாக தெரிவிக்கப்படுகிறது.

(அ)



# மேற்குலக நாடுகளிடம் உடனடியாக ஆயுத உதவிகளை கோரும் உக்ரைன்



கீவ், பெப். 10

உடனடியாக இராணுவ உதவிகளை அனுப்பிவைக்குமாறு உக்ரைன், மேற்குலக நாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

உக்ரைனுக்கு பீரங்கிக் குண்டுகள் தேவைப்படுவதாகவும் அவற்றை உடனடியாக சீக்கிரம் அனுப்பி வைக்குமாறும் அந்த நாடு கோரியுள்ளது.

ரஷ்யா அண்மையில் உக்ரைன் தலைநகர் கீவ் மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களை இலக்கு வைத்து ஏவுகணை தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் 4 பேர் கொல்லப்பட்டதுடன் 40க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

உக்ரைனுக்கு எதிரான தாக்குதல்களை ரஷ்யா தீவிரப்படுத்தியுள்ள நிலையில், அதற்கு பதில் தாக்குதல்களை நடத்த பீரங்கி குண்டுகள் அவசரமாக தேவைப்படுவதாக உக்ரைன் கூறியுள்ளது.

இந்த நிலையில், ரஷ்ய நடத்தும் ஒவ்வொரு ஏவுகணை தாக்குதலுக்கும் பதில் தாக்குதல் நடத்தப்படும் என உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார். நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்துவது மாத்திரமல்ல, ரஷ்யாவுக்கு கூடுதலான இழப்பை ஏற்படுத்துவதே உக்ரைனின் இலக்கு எனவும் கூறியுள்ளார்.

ரஷ்யா, ஆளில்லா விமானங்கள்,ஏவுகணைகள், போர் விமானங்களை சுட்டு வீழ்த்துவதற்கான ஆயுதங்களை உக்ரைனுக்கு எதிராக பயன்படுத்தி வருவதாக உக்ரைன் இராணுவ தளபதி வெலரி சலுஷ்னி தெரிவித்துள்ளார்.

(அ)

# உலகில் மிகப்பெரிய பணக்கார நாடாக விளங்கும் லக்சம்பேர்க்

## தனிநபர் வருமானம் 126,426 டொலர்கள்

நியூயோர்க், பெப். 10

அமெரிக்காவே உலகில் மிகப்பெரிய பணக்கார நாடாக கருத்தப்பட்டாலும் அந்த நாட்டை விட பல செல்வந்த நாடுகள் உலகில் உள்ளன.

ஐரோப்பாவில் உள்ள லக்சம்பேர்க் நாடே உலகில் மிகப்பெரிய பணக்கார நாடு. இந்த நாட்டின் ஆண்டு தனிநபர் வருமானம் சுமார் ஒரு லட்சத்து 26 ஆயிரத்து 426 அமெரிக்க டொலர்கள் ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றம் என்பது பொதுவாக தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

ஆனால் இந்த தரத்தின் மூலம் செல்வந்த நநாடுகளை ஒப்பிட முடியாது. 2022 ஆம் ஆண்டில் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி, மக்களின் கொள்வனவு திறன் மற்றும் உற்பத்தித் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் தரவுகளின்படி உலகின் பணக்கார நாடுகள் வரிசையில் ஐரோப்பிய நாடான லக்சம்பேர்க் முதல் இடத்தில் உள்ளது.



2022 ஆம் ஆண்டில், இந்த நாட்டின் மொத்த தனிநபர் வருமானம் ஒரு லட்சத்து 26 ஆயிரத்து 426 டொலராக காணப்பட்டது.

அதேவேளை உற்பத்தித்திறன் அடிப்படையில், லக்சம்பேர்க் இரண்டாவது இடத்தில் உள்ளதுடன் நோர்வே முதலிடத்தில் உள்ளது.

உலகில் உள்ள முதல் 10 பணக்கார நாடுகளை எடுத்துக்கொண்டால், அவற்றில் 8 நாடுகளில் மக்கள் தொகை ஒரு மில்லியனுக்கும் குறைவாக உள்ளது.

தனிநபர் வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உலகின் பணக்கார நாடாக விளங்கும் லக்சம்பேர்க் நாட்டின் மொத்த மக்கள் தொகை 6 லட்சத்து 60 ஆயிரம்.

அந்த நாட்டின் சாதகமான வரிக் கொள்கைகள் காரணமாக வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்துள்ளன.

இந்த சிறிய நாட்டின் கணிசமான செல்வம் காரணமாக, அந்நாட்டு மக்கள் இலவச கல்வி, சுகாதாரம் மற்றும் போக்குவரத்து போன்ற வசதிகளை அனுபவித்து வருகின்றனர். (அ)

# தென்னாபிரிக்காவின் பொதுத் தேர்தல் திகதி இம்மாத இறுதியில் வெளியாகும்!

கேப்ரவுண், பெப். 10

தென்னாபிரிக்காவின் இந்த ஆண்டுக்கான பொதுத் தேர்தல் திகதியை இம்மாத இறுதியில் அந்த நாட்டு ஜனாதிபதி சிறில் ரமபோஷா அறிவிப்பார் என ரொய்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் 15 நாட்களுக்குள் தேர்தல் தொடர்பான அறிவிப்பை அவர் வெளியிடுவார் என தென்னாபிரிக்க ஜனாதிபதியின் செய்தி தொடர்பாளரை மேற்கோள்காட்டி ரொய்டர்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

வரலாறு காணாத மின்வெட்டு, பின்னடைவான சேவை வழங்கல் மற்றும் அதிக அளவிலான வேலையின்மை போன்ற பல்வேறு விடயங்களில் தென்னாபிரிக்க மக்கள் பாதிப்புக்குள்ளாகியிருந்தனர்.

இந்தநிலையில், அது சிறில் ரமபோசா தலைமையிலான ஆளும் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியை பாதிக்கக்கூடும் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

1994ல் நிற அடிப்படையிலான சர்ச்சை முடிவுக்கு வந்த பின்னர் முதல் முறையாக ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி அதன் பாராளுமன்ற பெரும்பான்மையை இழக்கும் என நிபுணர்கள் எதிர்வுகூறியுள்ளனர். (அ)

# தேர்தல் இலக்கு நோக்கி நகர்கின்றது அரசாங்கம்!

## பவ்ரல் அமைப்பு குற்றச்சாட்டு

**கொழும்பு, பெப். 10**

**தேர்தல்களை இலக்காகக் கொண்டே அரசாங்கம் பல திட்டங்களை ஆரம்பித்துள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி சுட்டிக்காட்டியுள்ளார்.**



கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனை சுட்டிக்காட்டியிருந்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் இரண்டிற்கும் 10 பில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஆனால் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்படுகின்றன. ஜனாதிபதித் தேர்தல் இவ்வருடத்தில் நடத்தப்பட வேண்டும்.

தேர்தலுக்கான திகதியை தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானிக்க வேண்டும். தேர்தலை இலக்காக கொண்டு அரசாங்கம் பல திட்டங்களையும் ஆரம்பித்துள்ளது.

தேர்தல் அதிகாரிகள் ஜூலை மாதத்திற்குள் ஜனாதிபதித் தேர்தலுக்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும்.

மேலும் அரசாங்கம் தனது அபிவிருத்தி திட்டங்களை ஜூலை மாதத்திற்குள் நிறைவேற்றினால், மாத்திரமே அது தேர்தல் ரீதியாக அவர்களுக்கு பயனளிக்கும்.

இந்த செயற்பாடு என்பது பொது நிதியை தவறாக பயன்படுத்துவதற்கு சமமானது.

அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் ஜூலை 31 ஆம் திகதிக்குள் முடிக்குமாறு அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு இரண்டு சுற்று நிருபங்கள் வழங்கியுள்ளோம்.

ஆனால் தொடர்ந்து அபிவிருத்தி திட்டங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன.

இது ரணில் விக்கிரமசிங்கவை வெற்றிபெறச் செய்யும் முயற்சியாகும்-என்றார். (அ)

# வயோதிபத் தம்பதி சடலங்களாக மீட்பு!

கொழும்பு, பெப். 10

வீடொன்றில் சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்த தம்பதியினரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளனர். மிரிஹான ஜூபிலி மாவத்தை பகுதியிலுள்ள வீடொன்றில் இருந்து நேற்று முன் தினம் இந்த சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

பொலிசார் குறித்த வீட்டிற்கு சென்று சோதனை செய்த போது, வீட்டின் அறையில் கட்டிலில் சில நாட்களுக்கு முன் உயிரிழந்த ஆணின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வீட்டின் சமையலறை தரையில் நிர்வாணமாக பெண்ணின் சடலம் இருந்ததாக பொலிசார் மேலும் தெரிவித்தனர். சில நாட்களாக குறித்த பகுதியில் கடும் துர்நாற்றம் வீசுவதாக அயலவர் ஒருவர் மிரிஹான பொலிஸாருக்கு வழங்கிய அறிவித்தலின் படி குறித்த வீடு சோதனையிடப்பட்டுள்ளது.

80 வயதுடைய ஆணும் 96 வயதான பெண்ணுமே உயிரிழந்துள்ளனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ)

# அதிவேக நெடுஞ்சாலை விபத்தில் சுற்றுலா பயணிகள் நால்வர் காயம்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் ஹம்பாந்தோட்டைக்கும் மத்தளவிற்கும் இடையிலான 187வது கிலோமீற்றர் தூணுக்கு அருகில் நேற்று வான் ஒன்றும் லொறி ஒன்றும் விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்தில் நான்கு ரஷ்ய சுற்றுலா பயணிகள் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மோசமான நிர்வாகத்தின் விளைவே வற் வரி அதிகரிக்க முக்கிய காரணம்

## சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு



கொழும்பு, பெப். 10

அரசாங்கத்தின் மோசமான பொருளாதார முகாமைத்துவத்தின் காரணமாகவே வற் வரி அதிகரிப்பு ஏற்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிர்வகிப்பதன் மூலம் பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அகவே சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடிய பின்னர் பொருளாதார அபிவிருத்திக்கான திருத்தப்பட்ட செயற்திட்டமொன்று ஆவணப்படுத்தப்பட வேண்டுமென சம்பிக்க ரணவக்க கூறினார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் போது நிர்ணயித்த 16 இலக்குகளை தற்போதைய அரசாங்கம் முழுமையாக நிறைவேறவில்லை என்றும் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டார். (அ)

# கப்பல்களுக்கு மீண்டும் எரிபொருள் ரூ. 3 மில்லியன் டொலர் வருமானம்!

கொழும்பு, பெப். 10

கப்பல்களுக்கான எரிபொருள் நிரப்பும் செயல்பாடுகளை மீள ஆரம்பித்ததன் மூலம் 5,200 மெற்றிக் டொன் எரிபொருளை விற்பனை செய்து 03 மில்லியன் டொலர்கள் வருமானம் ஈட்ட முடிந்ததாக மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் டி. வீ. சானக தெரிவித்தார்.

வலுசக்தி தேவைகளுக்காக 200 மில்லியன் டொலர்கள் மேலதிகக் கையிருப்பு பேணப்படுவதாகும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடினமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு நாடு படிப்படியாக மீண்டு வரும் சூழ்நிலையில் நாம் தற்போது இருக்கிறோம். ஒரு காலத்தில் நாம் அனைவரும் எரிபொருள் வரிசையில் நின்றோம். அனைவரின் அர்ப்பணிப்புடன், நிலையான எரிபொருள் விநியோகத்தை பேண முடிந்துள்ளது.

அண்மைக்கால வரலாற்றில் தற்போது மிகப்பெரிய அளவிலான எரிபொருள் கையிருப்பு வைத்திருக்கிறோம். பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் டொலர்களின் சேமிப்பையும் எம்மால் பேண முடிந்துள்ளது.

வலுசக்தித் தேவைக்காக, 200 மில்லியன் டொலர்கள் மேலதிக்க கையிருப்பு மற்றும் ஒரு வாரத்திற்கு அவசியமான டொலர்களை அதே வாரத்தில் பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

டிசெம்பரில் மாதத்தில் இருந்து ஏப்ரல் மாத நடுப்பகுதி வரை, உலகில் எரிபொருள் விலை உயர்வு இயல்பான சூழ்நிலையாகிவிட்டது. இதற்குக் காரணம், ஐரோப்பாவில் குளிர் காலம் தொடங்கியுள்ள நிலையில், எரிபொருள் பயன்பாடு அதிகமாக உள்ளது. அந்தக் காலக்கட்டத்தில் கேள்வி அதிகரிப்புடன் ஒவ்வொரு ஆண்டும் விலை உயர்வு ஏற்படும் என்பதைக் கூற வேண்டும். அதன்படி, குளிர்காலம் முடிவடையும் நிலை யில், மார்ச் மாதத்துக்குப் பிறகு எரிபொருள் விலை குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் பயனை வாடிக்கையாளருக்கு அளிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

மேலும், 2022 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஒவ்வொரு ஆண்டும் தாமதக் கட்டணம் செலுத்தவேண்டி ஏற்பட்டது. ஆனால் 2023 இல், நாங்கள் ஒரு புதிய பொறிமுறையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்தோம். கப்பல்கள் துறைமுகத்திற்கு வந்தவுடன் அவற்றை களஞ்சியப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டது. பின்னர் எம்மிடம் உள்ள டொலர்களை செலுத்தி எரிபொருள் கொள்வனவு செய்தோம். அந்த முறையின் மூலம், 15 ஆண்டுகளுக்குப் பிறகு, தாமதக் கட்டணமாக ஒரு ரூபாய் கூட செலுத்தவில்லை.-என்றார். (அ)

# இலங்கைக்கும் பேர்த் நகருக்கும் இடையிலான நேரடி விமான சேவைகளை மேம்படுத்த திட்டம்

கொழும்பு, பெப். 10

இந்து சமுத்திர மாநாட்டில் பிரதான உரையாற்ற அவுஸ்திரேலியா சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் மேற்கு அவுஸ்திரேலியாவின் பிரீமியர் ரோஜர் குக்கிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று பேர்த் நகரில் நடைபெற்றது.

இலங்கைக்கும் மேற்கு அவுஸ்திரேலியாவுக்கும் இடையில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மற்றும் விவசாயம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கும், இலங்கைக்கும் பேர்த் நகருக்கும் இடையிலான நேரடி விமான சேவைகளை மேம்படுத்துவதற்கும் ரோஜர் குக் இணக்கம் தெரிவித்தார்.

புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறையில் காணப்படும் சாத்தியக்கூறுகளை விவரித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இலங்கை புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறையை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இலங்கையின் விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டம் குறித்து விளக்கமளித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இந்தத் துறையில் முதலீடுகளை ஊக்குவிக்குமாறும், இலங்கைக்கு விஜயம் செய்து, இந்நாட்டில் உள்ள முதலீட்டு வாய்ப்புகள் குறித்து ஆராயுமாறும் ரோஜர் குக்கிற்கு அழைப்பு விடுத்தார்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, அவுஸ்திரேலியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சித்ராங்கனி வாகீஷ்வர, பாராளுமன்ற உறுப்பினர்களான சிந்தக மாயதுன்ன, இஷாக் ரஹ்மான், ஜனாதிபதியின் சர்வதேச உறவுகள் பணிப்பாளர் தினுக் கொழும்பகே மற்றும் ரிஷான் டி சில்வா ஆகியோரும் ஜனாதிபதியுடன் இந்தச் சந்திப்பில் இணைந்து கொண்டனர். (அ)

# சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட 13 பேர் கைது!

கொழும்பு, பெப். 10

ஹப்புத்தளை, விகாரகல பகுதியில் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட 13 பேர், கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் அம்பாறை, கல்கமுவ, மஹரகம, பண்டாரவளை, அடம்பிட்டிய, வெவெல்தெனிய, மாகொல மற்றும் கொழும்பு 05 ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹப்புத்தளை, விகாரகல கித்துல்கஹவத்த பகுதியில் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் சிலர் ஈடுபட்டு வருவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய பொலிஸார் குறித்த பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் மேற்கொண்ட போது குறித்த 13 சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் அத்தோடு மாணிக்கல் அகழ்வுக்கு பயன்படுத்தப்படும் சில உபகரணங்களும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

விசாரணையில் பின்னர் சந்தேக நபர்களை பண்டாரவளை நீதிமான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## யாழ்...

பணியாற்றிய இ. த. ஜெயசீலன் பச்சி லைப்பள்ளி பிரதேச செயலாளராக கட மைகளை உத்தியோகபூர்வமாக பொறுப் பேற்றுள்ளார்.

இதேசமயம், பச்சிலைப்பள்ளி பிர தேச செயலாளராக கடமையாற்றிய ச. கிருஷ்ணேந்திரன் யாழ். மாநகர சபை யின் புதிய ஆணையாளராக பொறுப் பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## எமது மக்களின்...

வலியுறுத்த விரும்புகின்றேன். இந்த நாடு அனைத்து நிலைகளிலும் வீழ்ந்தி ருந்த நிலையில் இத்தனைக் குறுகிய காலத்துள் நாடு இந்தளவு எழுந்திருக்கும் என எவரும் எண்ணியிருக்க மாட்டார் கள். அது இன்று சாத்தியமாக்கப்பட்டு வருகின்றது.

இத்தகைய சாதனையை நிகழ்த்திக் காட்டி வருகின்ற ஜனாதிபதியால், எமது மக்களின் அனைத்துப் பிரச்னைகளையும் தீர்க்க முடியாது என்றில்லை. அவருக்கு எமது அனைத்துத் தரப்பினரின் ஒத்து ழைப்புகள் முழுமையாக கிடைக்கின்ற சந்தர்ப்பத்தில் அவை அனைத்தும் சாத்தியமாகும் என்பதில் எனக்கு நம் பிக்கை இருக்கின்றது.

அந்த நம்பிக்கையை நிறைவேற்ற அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து ஜனாதிபதிக்கு ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும் - என்றார். (ஐ)

## தென்னிந்தியா...

அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நேற்று ஆரம்பமான 7ஆவது இந்து சமுத் திர மாநாட்டில் உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், உலகின் பலமான நாடுகள் தமது தலைவிதியைத் தீர்மானிக்கும் வரை காத்திருக்காமல் தமக்கான பாதையை அமைத்துக் கொள்ளும் இய லுமை இந்து சமுத்திர வலய நாடுக ளுக்கு உள்ளது. இந்து சமுத்திர வலய நாடுகளின் நம்பிக்கையையும் விழிப்பு ணர்வையும் மேம்படுத்துவதன் மூலம் பாதுகாப்பான இந்து சமுத்திரத்தை உருவாக்க முடியும்.

2050 ஆண்டளவில் இந்தியா, இந் தோனேசியா போன்ற நாடுகளின் மொத்த தேசிய உற்பத்தி 8 மடங்காக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள் ளது. எனவே, அதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் வகையில் நாடுகளுக்கு இடையிலான தொடர்புகளை வலுப் படுத்தும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டியது அவசியம்.

கடல் மற்றும் விமானப் போக்குவ ரத்து சுதந்திரத்துக்கு இடையூறு விளை விக்காத வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பிலான ஒழுங்கு விதிகள், கால நிலை நெருக்கடியை கையாள்வது மற் றும் இந்து சமுத்திரத்தின் நிலையான பயன்பாடு தொடர்பான வழிகாட்டல் விதிமுறைகளும் அவசியம்.

வர்த்தகப் போக்குவரத்துகளுக்காக தற்காலத்தில் பயன்படுத்தப்படும் சுயேஸ் கால்வாய் உள்ளிட்டவை எதிர் காலத்தில் போதுமானவையாக இருக் காது. எனவே, பிராந்தியத்தின் விநி யோக மையம் என்ற வகையில் இலங்கை தென்னிந்தியாவுடன் வர்த்தகத்தை எளிதாக்குவதற்கான புதிய தரைவழித் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு முயற்சித்து வருகிறோம்.

இதேபோல், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஸ்திரத்தன்மையை பேணுவது முக்கியம். இதேபோன்றே காலநிலை மாற்றத்துக்கான தீர்வுகளைக் கண்டறிவதிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும் - என்றார்.

அத்துடன், இந்து சமுத்திரத்தின் ஸ்திரத்தன்மைக்காக 5 வருடங்களுக்குள் சுதந்திரமானதும் சுயாதீனமானதுமான பலஸ்தீன அரசை நிறுவி, இஸ்ரேல் அரசின் பாதுகாப்பை உறுதி செய்யும் நடவடிக்கைகளின் மூலம் காஸா பகுதி யில் போர் மோதல்களை விரைவாக முடிவுக்குக் கொண்டுவருவது அவசியம் - என்றும் ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்திருந்தார். (ஐ)

## ஒருநாள்...

*சிக்ஸர்களுடன் 139 பந்துகளில் 210 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழக்கா மல் இருந்தார்.*

*இதனால், 50 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 3 விக்கெட்கள் இழப் புக்கு 381 ஓட்டங்களை குவித்திருந்தது.*

*இரட்டை சதம் அடித்த பதும் நிஷங் கவுக்கு சனத் ஜெயசூரிய உள்ளிட்ட முன்னாள் வீரர்கள் பலரும் வாழ்த்துக் களை தெரிவித்து வருகின்றனர். (ஐ)*

## சிறுவரிடையே...

*சிக்கல்களை - ஆஸ்துமா உள்ள வர்களுக்கு அதிகரிக்கிறது. குழந்தை பருவ ஆஸ்துமாவின் பொதுவான அறி குறிகளில் மூச்சுத் திணறல், சுவாசிப்பதில் சிரமம் மற்றும் தொடர்ந்து இருமல் ஆகியவை அடங்கும்" - என்றார். (ஐ)*

## கோபா...

இவ்வாறு நியமிக்கப்பட்ட பாராளு மன்ற உறுப்பி னர்களின் பெயர் நேற்று பாராளுமன்றத்தில் சபாநாயகரால் அறி விக்கப்பட்டது.

கோபா குழுவில், எம். ஏ. சுமந்திரன், ரவூப் ஹக்கீம், சுரேன் ராகவன், ஷெஹான் சேமசிங்க, சீதா அரம்பே பொல,அனுப பஸ்குவல், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, வஜிர அபேவர்தன, விஜித ஹேரத், மகிந்தானந்த அலுத் கமகே, துமிந்த திஸநாயக்க, சந்திம வீரக்கொடி, நாலக கொடஹேவா, ஹர்ஷ டி சில்வா, நிமல் லான்சா, கவிந்த ஹேஷான் ஜயவர்த்தன, மயந்த திஸ நாயக்க, ஹர்ஷன ராஜகருணா, யூ.கே. சுமித் உடுகும்புர, பிரதீப் உந்துகொட, இசுரு தொடன்கொட, பிரேம்நாத் சி. தொலவத்த, மதுர விதானகே, எம். டப்ளியூ. டீ. சஹன் பிரதீப் விதான ஆகியோர் இந்தக் குழுவின் உறுப்பி னர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## பரிந்துரைகளை...

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் எல். ரி. வி. தெஹிதெனியவின் கையொப்பத்துடன் சபாநாயகருக்கு அனுப்பப்பட்டுள்ள இந்த கடிதத்தின் பிரதிகள், ஜனாதிபதி, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் சட்ட மா அதிபருக்கும் அனுப் பப்பட்டுள்ளன.

நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தின் 30இற்கும் மேற்பட்ட பிரிவுகள் அரசியலமைப்புடன் இணங்கவில்லை யென உயர் நீதிமன்றம் அடையாளப் படுத்தியிருந்தது. உரிய திருத்தங்களுக் கமைய, சட்டமூலத்தை நிறைவேற்ற நீதிமன்றம் அனுமதி வழங்கிய போதி லும் அந்த திருத்தங்கள் முழுமையாக அதில் உள்ளடக்கப்பட்டுள்ளதை காண முடியவில்லை.

உயர் நீதிமன்றம் வழங்கிய திருத்தங்கள் உள்ளடக்கப்படாமல் அரசமைப்புக்கு முரணான வகையில் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளமையின் ஊடாக மக்களின் அடிப்படை உரிமை களை பாதுகாப்பதற்குள்ள வாய்ப்புகள் தொடர்பில் கவலைக்குரிய நிலை தோன்றியுள்ளது.

அரசமைப்புக்கு முரணாக உள்ள மையால், மூன்றில் இரண்டு விசேட பெரும்பான்மையின் மூலம் நிறைவேற் றிக்கொள்ள வேண்டிய தேவை காணப் பட்ட போதிலும் சாதாரண பெரும் பான்மையின் மூலம் நிறைவேற்றிக் கொண்டமையை சாதாரண நிலை மையாக கருத முடியாது.

இந்த சட்டம் முழுமையாக உயர் நீதிமன்றத்தின் தீர்மானங்களுக்கு இணங்க முன்வைக்கப்பட வேண்டு மென்பதுடன், அதனூடாக இலங்கை பிரஜைகளின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் - என்றும் அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

# உர நிறுவன பணிப்பாளர்களின் முன்பிணை கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு, பெப். 10

தமக்கு முன்பிணை வழங்குமாறு உர நிறுவனத்தின் பணிப்பாளர்கள் இரு வரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு உர மானியம் வழங்குவதில் அரசாங்கத்தின் கோடிக் கணக்கான பணத்தை மோசடி செய்த மைக்கு எதிரான விசாரணைகளின்போது பொலிஸாரால் கைது செய்யப்படலாம் என்ற அடிப்படையில் முன்பிணை வழங்குமாறு உர நிறுவன பணிப்பா ளர்கள் இருவர் முன்வைத்த கோரிக்கையையே கொழும்பு பிரதான நீதிவான் பிரசன்ன அல்விஸ் நேற்று நிராகரித்தார்.

விவசாயிகளுக்கு வழங்கப்படவிருந்த அரசு உர மானியத்தை முறைகேடாக பயன்படுத்தியமை தொடர்பான விசார ணைகள் ஆரம்பமாகியுள்ள நிலை யிலேயே இவர்கள் இருவரும் இந்தக் கோரிக்கையை நீதிமன்றில் முன் வைத்தனர். (ஐ)

## எனது....

திருகோணமலையில் நடந்த மத்திய செயல்குழு, பொதுக் குழு கூட்டத்தின் முடிவில் சுமுகமான முறையில் பொதுச் செயலாளர் பதவியைத் தெரிவு செய் யவே முடிவு எடுக்கப்பட்டது. கட்சி யினர் இரண்டு நிலைப்பாட்டை கொண் டிருந்தனர். தேர்தல் மூலம் பொதுச் செயலாளரை தெரிவு செய்வது, தலா ஒரு வருடத்துக்கு பொதுச் செயலாளர் பதவியை பகிர்வது என்று.

கட்சியில் சுமுக நிலையை ஏற்படுத்து வதற்காக பொதுச் செயலாளர் பதவியை பகிர்வதற்கு அப்போது இணக்கம் தெரி வித்தேன். கட்சியின் தலைவரிடம் இந்த இணக்கத்தை வெளிப்படுத்தினேன். ஆனால், இதற்கு எனது ஆதரவாளர்கள் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டி ருந்தனர். எனவே, பொதுச் செயலர் பதவியை முதல் வருடத்தில் நான் வகிப் பதா அல்லது குகதாசனுக்கு விட்டுக் கொடுப்பதா என்பதை எனது ஆதரவா ளர்களுடன் பேசியே முடிவு எடுப்பேன். எனது தீர்மானத்தை ஆதவாளர்களே எடுப்பர் - என்றும் கூறியுள்ளார்.

நெற்றிக்கண் நிகழ்ச்சியை இன்று சனிக்கிழமை இரவு 10 மணிக்கு டான் தமிழ் ஒளி தொலைக்காட்சியில் காண முடியும். (ஐ)

## மின்...

திட்டங்கள் தொடர்பில் முன்வைக்கப் பட்ட யோசனைகளை நடைமுறைப் படுத்தப்படாது விட்டால் இந்த நிலைமை ஏற்படும் என அவர் குறிப் பிட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரிவிக் கையில் ,

கடந்த அரசாங்கங்கள் எடுத்த மின் உற்பத்தித் திட்டங்கள் மற்றும் சில தீர்மானங்களின்படி மின் உற்பத்தி நிலையங்கள் இயங்காததன் விளைவு களை மக்கள் தற்போது அனுபவிக்க நேரிட்டுள்ளது.

செயலிலுள்ள ஆற்றலின் சிறப்பு பயன்பாடுகள் ஊடாக எதிர்கால உற் பத்தித் திட்டங்களைத் தயாரிக்க வேண் டும். இலங்கை மின்சார சபையும் அதனு டன் தொடர்புடைய தனியார் நிறுவன மும் நாட்டிலேயே மிகப்பெரிய சூரிய தகடு ( Solar panel) மின் உற்பத்தித் திட்டத்துக்கான மின்சார கொள்முதல் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர நாட்டின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இலக்குகளை அடைவதற்கு விசேட பங்களிப்பை வழங்கவுள்ளார் - என்றார்.

## இந்தியாவுடன்...

இதன்போது அவர் மேலும் கூறி யவை வருமாறு,

ஜனாதிபதி தேர்தலில் பரந்த கூட் டணியுடன் இணைந்து போட்டியிட ஐக்கிய மக்கள் சக்தி தயார். நாட்டுக்கு பங்களிக்கக் கூடியவர்கள் ஐக்கிய மக்கள் கூட்டணியில் இணைந்து வருகின்றனர்.

திருடர்கள், கொள்ளையர்கள், இனவாதிகள் கூட்டணியில் இணைத் துக் கொள்ளப்பட மாட்டார்கள். பணிகளைச் செய்யக்கூடிய படித்த - அனுபவமுள்ளவர்களையே இணைத்து வருகிறோம். சஜித் பிரேமதாஸ ஊழ லுக்கும் மோசடிக்கும் எதிரானவர் என்ப தாலும் மக்களுக்காக பணியாற்றுவதா லுமே சஜித் பிரேமதாஸவை அனை வரும் ஆதரிக்கின்றனர்.

ஊழலுக்கும் மோசடிக்கும் எதிராக குரல் கொடுக்கும் செயல்படும் ஒரு தலைவன், நாட்டின் தலைவராக வந் தால், நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியும். 1994 இல் இருந்து இப்படியொரு தலைவர் நாட்டில் தோன்றவில்லை.

இந்தியாவுடன் பேச்சு நடத்த ஐக்கிய மக்கள் சக்தி தயாராகி வருவதாக செய்தி கள் வெளியாகியிருந்தன. இந்த செய்தி முற்றிலும் தவறானது - பொய்யானது. ஐக்கிய மக்கள் சக்திக்கு அவ்வாறான தேவைப்பாடு ஒன்றில்லை. இந்தியாவு டனும் இந்தியத் தலைவர்களுடனும் ஐக்கிய மக்கள் சக்தி நெருக்கமாக பணியாற்றி வருகிறது. அபிவிருத்தி காணும் இலங்கையை பார்க்கவே இந்தியா விரும்புகிறது.

இந்தியா வளர்ச்சியடைந்தால், பாகிஸ்தான் வளர்ச்சியடைந்தால் இலங்கைக்கும் நலன் கிட்டும். அந்த நாடுகளின் பொருளாதாரம் வீழ்ச்சிய டைந்தால் அது இலங்கையையும் பாதிக்கும்.

இலங்கையின் அபிவிருத்தி எமது நாட்டைப் பெரிதும் பாதிக்கின்றது. இந்த விடயத்தை ஒரு கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி நன்கு புரிந்து வைத்துள் ளது. இந்தியா உட்பட அயல் நாடுகள் ஐக்கிய மக்கள் சக்தியை பெரிதும் விரும்புகின்றன. ஏனெனில், ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் இலங் கையை தற்போதைய சூழ்நிலையில் இருந்து மீட்க முடியும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இணைத்துக் கொள்ளப்படாதோர் வேறு கூட்டணி யில் இணைந்து வருகின்றனர். இல்லை யெனில், அவர்களால் அடுத்த தேர்தலில் வெற்றி பெற முடியாது.

நாட்டில் உள்ள பல கட்சிகள் ஐக்கிய மக்கள் கூட்டணியில் இணைவது குறித்து ஆலோசித்தன. ஆனாலும் பல தரப்பினருக்கு நாங்கள் சாதகமான பதிலை வழங்கவில்லை. கட்சியின் கொள்கைகளுடன் உடன்படுபவர்கள் மட்டுமே ஐக்கிய மக்கள் சக்தியோடு இணைத்துக் கொள்ளப்பட்டு வருகின் றனர்.

பாராளுமன்றத்தில் ஆளும் கட்சி யைச் சேர்ந்த சுமார் 25 முதல் 30 பேர் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொள்ளவுள்ளனர். மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் சிலரும் எம்முடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகின்றனர் - என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# 5 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து மீனவர்கள் யாழில் கவனவீர்ப்பு பேரணி






யாழ்ப்பாணம், பெப். 10

**ஐந்து அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கோரி மீனவர்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்பு பேரணியில் ஈடுபட்டனர்.**

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துக்கு முன் ஆரம்பமான இந்த பேரணி வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் வரை சென்றது.

பின்னர், ஆளுநர் ஊடாக ஜனாதிபதியிடம் கையளிப்பதற்கு ஐந்து அம்சக் கோரிக்கைகள் அடங்கிய மகஜரொன்று ஆளுநரின் பிரதிச் செயலாளரிடம் கையளிக்கப்பட்டது.

அந்த மகஜரில் உள்ளடக்கப்பட்டுள்ள ஐந்து அம்சக் கோரிக்கைகளாவன :

1. புதிதாக உருவாக்கப்பட்ட மீனவர் சட்ட வரைபை நிராகரித்தல்
2. வெளிநாட்டு மீன்கள் இறக்குமதி செய்தலை நிறுத்தல்
3. வெளிநாட்டு படகுகளுக்கு இலங்கை கடலில் மீன்பிடிக்க அனுமதி வழங்கக் கூடாது.
4. வெளிநாட்டு படகுகளில் இலங்கை மீனவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு நஷ்ட ஈடு வழங்க கோரல்
5. கடற்றொழிலாளர்களுக்கான வரவு - செலவு திட்டத்தை மீள்பரிசீலிக்க கோரல் - என்பனவாகும்.

இந்த கவனயீர்ப்பு பேரணியின் போது ஊர்காவற்றுறை கடற்றொழில் சமாசத்தின் செயலாளர் அ. அன்னராசா, கிளிநொச்சி மாவட்ட சமாச தலைவர் ஜோசப் பிரான்ஸிஸ், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சமாச தலைவர் எம். தணிகாசலம், மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர் சமாச தலைவர் ராஜா குருஸ், மன்னார் மாவட்ட பிரதேச சமாச தலைவர் ஜே.ஜோகராஜ் மற்றும் மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். (அ)

## ஜோர்தானில் தொழிலை இழந்த இலங்கையர்கள் நாடு திரும்பினர்!

கொழும்பு, பெப். 10

ஜோர்தானில் இரண்டு ஆடைத்தொழிற் சாலைகள் மூடப்பட்டதால் 66 இலங்கையர்கள் தொழிலையிழந்த நிலையில் நாடு திரும்பினர் .

ஜோர்தானில் இரண்டு ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டதால் பணி புரிந்த 66 இலங்கையர்கள் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை நாடு திரும்ப யுள்ளனர்.

ஜோர்தானில் இத் தொழிற்சாலைகளை நடத்தி வந்த இரண்டு நிறுவனங்கள் அங்கு பணியாற்றிய ஊழியர்களுக்கு எவ்வித அறிவித்தலையும் வழங்காது தொழிற் சாலைகளை மூடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் , குறித்த தொழிற்சாலைகளில் பணியாற்றிய இலங்கையர்கள் குழுவொன்று தமக்குக் கிடைத்த சலுகைகளைப் பெற்றுக் கொண்டு கட்டு நாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர் .

இதே தொழிற்சாலையில் பணிபுரிந்த மற்றுமொரு இலங்கை குழுவினர் எதிர்வரும் இரண்டு நாட்களில் நாட்டை வந்தடையவுள்ளதாக ஜோர்தானில் உள்ள இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.

# நாகப்பட்டினம்-திருமலை எண்ணெய் குழாய் இந்தியாவுடன் இலங்கை பல தரப்புப் பேச்சு

கொழும்பு, பெப். 10

நாகப்பட்டினத்துக்கும் திருகோணமலைக்கும் இடையில் பல தயாரிப்பு எண்ணெய் குழாய்களை அமைப்பது குறித்து இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக இலங்கையின் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இது குறித்து தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ள அமைச்சர்,

இந்திய எரிசக்தி வாரத்தை முன்னிட்டு நான் நேற்று முன் தினம் இந்தியன் எண்ணெய் நிறுவன அதிகாரிகளுடன் ஒரு சந்திப்பை நடத்தினேன்.

இதன்போது, நாகப்பட்டினம் - திருகோணமலை ஆகியவற்றை இணைக்கும் எண்ணெய் குழாய் அமைப்பு தொடர்பான ஐஓசி மூலமான இந்திய அரசின் முன்மொழிவு குறித்து விவாதித்தோம்.

பொறிமுறையை முடிவு செய்ய தொழில்நுட்ப ஆய்வுகள், தேவை சந்தை பகுப்பாய்வு, நிதி பகுப்



பாய்வு மற்றும் வணிக மாதிரிகள் நடத்தப்படும்.

திருகோணமலை எண்ணெய் தொட்டி பண்ணை, இலங்கை பெற்றோலிய சேமிப்பு முனையம் லங்கா ஐஓசி யின் சில்லறை வர்த்தக நடவடிக்கைகளில் கூட்டு முயற்சியின் கீழ் முதலீடுகள் மற்றும் திட்டங்களின் விரிவாக்கம் குறித்தும் நாங்கள் கலந்துரையாடினோம்.- என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்திய பெற்றோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சின் அழைப்பின் பேரில் இந்திய எரிசக்தி வாரத்தின் 2 ஆவது மாநாட்டில் பங்கேற்பதற்காக அமைச்சர் காஞ்சன விஜேசேகர இந்தியா சென்றுள்ளார்.

இந்த பயணத்தின் போது, இந்தியாவின் பெற்றோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர் ஹர்தீப் எஸ் பூரியுடன் நடத்தப்பட்ட இருதரப்பு சந்திப்புகளில், இந்திய அரசின் உதவியுடன் நடைபெற்று வரும் எரிசக்தி திட்டங்கள், இந்திய முதலீடுகள் மற்றும் எதிர்கால முன்னேற்றங்கள் குறித்த எரிசக்தி கொள்கைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு விநியோகம், எண்ணெய் குழாய் இணைப்பு, எண்ணெய் மற்றும் எரிவாயு ஆய்வு, லங்கா ஐ.ஓ.சி செயல்பாடுகள், திருகோணமலை தொட்டி பண்ணை மேம்பாடு மற்றும் நிலையான ஆற்றல் உற்பத்தி திட்டங்கள் ஆகியவை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. (அ)

## தமன்னா, யோகி பாபு நேற்று யாழ். வந்தனர்!



யாழ்ப்பாணம், பெப். 09

தென்னிந்திய திரையுலகின் பிரபல நடிகை தமன்னா, நகைச்சுவை நடிகர்களான யோகி பாபு, புகழ் உள்ளிட்டவர்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்தனர்.

பிரபல தென்னிந்திய பாடகர் ஹறிகரனின் இசை நிகழ்வு யாழ்ப்பாணம் முற்றவெளியில் நேற்று நடைபெற்றது. இதில் பங்கேற்பதற்காகவே இவர்கள் நேற்று மதியம் யாழ்ப்பாணம் வந்தனர். பாடகர் ஹறிகரன் உள்ளிட்ட பலர் முன்னதாகவே யாழ்ப்பாணம் வந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வீதிகளில் நெல் காயவிடுவதால் விபத்துகள்; நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி கடிதம்!

முல்லைத்தீவு, பெப். 10

வீதிகளில் நெல் காயவிடுவதால் விபத்துகள் அதிகரித்துள்ளன. எனவே, இந்த விபத்துகளை தவிர்க்க நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு அந்தப் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் மருத்துவர் கு. அகிலேந்திரன் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில், அண்மைக் காலமாக வீதி விபத்துகள் அதிகரிப்பதற்கு முக்கிய காரணியாக இருப்பது பிரதான வீதிகளில் நெல் உலர்த்துவது அல்லது காயப்போடுவது ஆகும். இதற்காக பிரதான வீதிகளின் அரைவாசியை விட அதிக பகுதியை பயன்படுத்துகின்றார்கள். சட்ட ரீதியாக இதற்கு அனுமதி இல்லை. எனினும், விவசாயிகளின் பொருளாதார நெருக்கடியை கருத்தில்கொண்டு மனிதாபிமான அடிப்படையில் அதிகாரிகளும் பொறுப்பானவர்களும் இதனைக் கண்டு கொள்வதில்லை.

எனினும், இதனால் ஏற்பட்ட விபத்துகளால் இந்த வருடத்தில் இரண்டு துர்மரணங்கள் இடம்பெற்றுள்ளன. எனவே வீதி பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக வீதிகளில் நெல் காயப்போடுவதற்கு சில கட்டுப்பாடுகள் அல்லது ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்துவது காலத்தின் தேவையாகும்.

வீதியின் நடு பகுதியிலிருந்து இரண்டு அடி குறைவாக நெல்லை காயவிடுதல், மருத்துவமனைகள், சன நெருக்கமான பகுதிகளை தவிர்த்தல் ஒடுக்கமான வீதிகள், வளைவுகள், பாலம் போன்ற இடங்களை தவிர்த்தல், தொடக்கத்திலும் முடிவிலும் ஒளிரக்கூடிய அல்லது கண்ணுக்கு தெளிவாக புலப்படக்கூடிய அடையாளம் வைத்தல், வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தால் அவற்றின் முன் பின் பகுதிகளில் ஒளிப் பிரதிபலிப்பு (Reflector) அடையாளம் பேணப்படுதல் போன்ற ஆலோசனைகளை கடைப்பிடிக்க வலியுறுத்துமாறு அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

மேலும், இந்தக் கடிதத்தின் பிரதிகள் பிரதேச செயலாளர்கள் முல்லைத்தீவு பொலிஸ் துறை , முல்லைத்தீவு விவசாய திணைக்களம், முல்லைத்தீவு வீதி அபிவிருத்தி அதிகாரசபை , முல்லைத்தீவு போக்குவரத்து திணைக்களம் என்பவற்றுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ)

## 'யுக்திய' நடவடிக்கை: சி. ஐ. டியின் பட்டியலில் இருந்த 7,494 பேர் கைது!

கொழும்பு, பெப். 10

'யுக்திய' சுற்றிவளைப்பின் போது குற்றவியல் விசாரணை பிரிவினருக்கு அனுப்பப்பட்டுள்ள பட்டியலில் பெயரிடப்பட்டுள்ள 7 ஆயிரத்து 494 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யுக்திய சுற்றிவளைப்பு ஆரம்பிக்கப்பட்ட காலப் பகுதியில் இருந்து இது வரை குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

44 ஆயிரத்து 794 பேரின் பெயர்ப் பட்டியல் நாட்டின் அனைத்து பொலிஸ் பிராந்தியங்களுக்கும் பொறுப் பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதற்கமைய, போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் திறந்த பிடியாணை பிறப்பிக் கப்பட்டுள்ள 4 ஆயிரத்து 88 பேரில் 1191 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏனைய குற்றங்கள் தொடர்பில் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள 33 ஆயிரத்து 936 பேரில் 5 ஆயிரத்து 708 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.02.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



## இங்கிலாந்துடனான டெஸ்ட் ஸ்ரேயாஸ் ஐயர் விலகல்!

புதுடில்லி, பெப். 10

முதுகு தசைப்பிடிப்பு மற்றும் இடுப்பில் ஏற்பட்ட கடும் வலியால் ஸ்ரேயாஸ் ஐயர் இங்கிலாந்துக்கு எதிரான அடுத்த 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால், அவர் இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது போட்டியில் ஆடமாட்டார் என்று தகவல்கள் தெரிவித்தன.

கடந்த ஆண்டு முதுகு காயம் காரணமாக சத்திர சிகிச்சை செய்து கொண்டார் ஸ்ரேயாஸ் ஐயர். சத்திர சிகிச்சைக்குப் பிறகே இந்தப் பிரச்னை அவருக்கு இருந்து வந்துள்ளது. இதனையடுத்து அவரை ஓய்வு எடுக்கும்படி மருத்துவர்கள் அறிவுறுத்தியதை அடுத்து அவர் டெஸ்ட் போட்டி தொடரில் பங்கேற்க வாய்ப்பில்லை என்று தெரிகிறது. (ஐ)



## டிராவிட்டின் அறிவுரையை மதிக்காது நடக்கும் இஷான்!

மும்பை, பெப். 10

இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்றுநர் ராகுல் டிராவிட்டின் அறிவுரையை ஏற்காமல் தனியாக பயிற்சி மேற்கொண்டு வருகிறார் இஷான் கிஷன்.

இந்திய கிரிக்கெட் அணியின் இஷான் கிஷான். இவர் தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இருந்து பாதியில் விலகினார். மனச்சோர்வு ஏற்பட்டதால் குடும்பத்துடன் நேரம் செலவிட விருப்பம் தெரிவித்து தொடரில் இருந்து பாதியில் விலகினார். அதன்பின் இந்திய அணிக்கு மீண்டும் தேர்வாகவில்லை.

இஷான் கிஷன் தெரிவாகாமைக்கு அவரின் நன்னடத்தை காரணம் என்று சொல்லப்பட்டது.

ஆனால் ,இதனை இந்திய அணியின் பயிற்றுநர் ராகுல் டிராவிட் மறுத்ததுடன், இந்திய அணியில் மீண்டும் இஷான் கிஷன் தேர்வு செய்யப்படும் முன்பு உள்ளூர் போட்டிகளில் விளையாட வேண்டும் என்று தெரிவித்தார்.

இதனிடையே, டிராவிட்டின் கூற்றுக்கு மாறாக ரஞ்சி கிண்ணப் போட்டிகளில் விளையாடாமல் குஜராத் மாநிலம் பரோடாவில் உள்ள ரிலையன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான மைதானத்தில் ஹார்திக் பாண்ட்யா மற்றும் குர்னல் பாண்ட்யாவுடன் இணைந்து பயிற்சி எடுத்து வருகிறார்.

ஐ. பி. எல். தொடர் விரைவில் தொடங்கவுள்ளதை அடுத்து அதற்கு தயாராகும் பொருட்டு தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளார் இஷான் கிஷன். ரஞ்சி கிண்ணத் தொடரில் தனது சொந்த மாநிலமான ஜார்கண்ட் அணிக்கு விளையாடாமல், டிராவிட்டின் அறிவுரைக்கு மாறாக பாண்ட்யா சகோதரர்களுடன் இஷான் கிஷன் பயிற்சியில் ஈடுபட்டிருப்பது தற்போது இந்திய கிரிக்கெட் வட்டாரத்தில் பேசுபொருளாகி உள்ளது. (ஐ)

# ஜெய் ஸ்ரீராம், அல்லாஹ் அக்பர் என்று கூறுவதில் வித்தியாசம் இல்லை!

### இந்திய கிரிக்கெட் வீரர் முகமது ஷமி

புதுடில்லி, பெப். 10

“ஜெய் ஸ்ரீராம் என்று சொல்வதிலோ, அல்லாஹு அக்பர் என்று சொல்வதிலோ எந்தத் தீங்கும் இல்லை. ஏனெனில், இதில் எந்த வித்தியாசமும் இல்லை. ஆயிரம் முறை சொல்லட்டும்” - என்று இந்திய கிரிக்கெட் வீரர் முகமது ஷமி தெரிவித்துள்ளார்.



ஷமி தற்போது நடைபெற்று வரும் இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் முழங்கால் காயம் காரணமாக விளையாடவில்லை. ஒருநாள் உலகக் கிண்ணத்தில் இலங்கைக்கு எதிரான போட்டியில் விக்கெட்டை வீழ்த்திய பிறகு ஷமி களைப்பினால் முழந்தாளிட்டார், உடனே அவர் சஜ்தா செய்ததாக சமூக ஊடகங்களில் படத்துடன் பரப்பப்பட்டது. ஆனால் தான் சஜ்தா செய்யவில்லை என்று அப்போது கூறிய ஷமி , சஜ்தா என்று கூறியவர்கள் மீது கடுமையான கருத்துகளையும் தெரிவித்தது சர்ச்சைக்குள்ளானது.

“எப்படி சஜ்தா விவகாரம் வந்தது? இராமர் கோயில் கட்டப்படும் போது ஜெய் ஸ்ரீராம் என்று சொன்னால் என்ன பிரச்னை? ஆயிரம் முறை சொல்லட்டும். நான் அல்லாஹு அக்பர் என்று சொல்ல விரும்பினால் ஆயிரம் முறை சொல்வேன்” என முகமது ஷமி தெரிவித்துள்ளார்.

உலகக்கிண்ணப் போட்டியின் போது அகமதாபாத்தில் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் ஜெய் ஸ்ரீராம் கோஷம் எழுந்ததாக சர்ச்சை கிளம்பியது நினைவிருக்கலாம். அது தொடர்பாகத்தான் தற்போது ஷமி இவ்வாறு கூறியுள்ளார்.

உண்மையில் இலங்கைக்கு எதிரான அந்த உலகக் கிண்ணப் போட்டியில் என்ன நடந்தது என்பதை யூரியூப் சனலில் ஷமி விளக்கும் போது, “நான் தொடர்ச்சியாக 5ஆவது ஓவரை வீசினேன், என் உடல் அனுமதிக்கும் இடத்தையும் தாண்டி முயற்சி எடுத்து வீசினேன். பந்து எட்ஜ் எடுக்காமல் நூலிழையில் மட்டையைத் தவற விட்டுச் சென்றது, எனவே, அந்த 5ஆவது விக்கெட் விழுந்தவுடன் களைப்பினால் நான் முழந்தாளிட்டேன். யாரோ என்னைப் பாராட்ட சற்றே தள்ளியதால் கொஞ்சம் முன்னால் நகர்ந்தேன்

அந்தப் படம் சமூக வலைதளங்களில் விரைவாகப் பரவியது. என்ன நினைத்து விட்டார்கள் என்றால் நான் சஜ்தா செய்ய நினைத்ததாகக் கூறிவிட்டனர். ஆனால், நான் சஜ்தா செய்யவில்லை. நான் அவர்களுக்கு ஒரேயோர் அறிவுரையைத்தான் வழங்க விரும்புகிறேன். இது போன்ற தொந்தரவுகளை செய்ய வேண்டாம் என்பது தான் என் அறிவுரை” என்று கூறியிருந்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறும்போது, “இந்த விசயத்தில் நான் யாருக்கும் பயப்படமாட்டேன். நான் ஒரு முஸ்லிம். இதனை நான் முன்னரே தெரிவித்திருக்கிறேன். அதில் நான் பெருமை கொள்கிறேன். இந்தியனாக இருப்பதிலும் பெருமை கொள்கிறேன். எனக்கு நாடுதான் முதன்மை. எனவே, இது யாருக்காவது பிரச்னையானால் நான் அதைப்பற்றி கவலைப்படமாட்டேன். நான் மகிழ்ச்சியாக வாழ்கிறேன். என் நாட்டுக்காக விளையாடுகிறேன். அதை விட எனக்கு வேறு எதுவும் பெரிது கிடையாது. சர்ச்சைகளை வேண்டுமென்றே சமூக ஊடகத்தார் செய்தால் நான் அவர்களைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. சஜ்தாவைப் பொறுத்தவரை நான் அதை விரும்பினால், அதைச் செய்ய வேண்டும் என்று நினைத்தால் நிச்சயம் செய்வேன். இதைப் பற்றி வேறு யாரும் கவலைப்பட வேண்டியதில்லை. ஒவ்வொரு மதத்திலும், மற்ற மதத்தைச் சேர்ந்த நபரை விரும்பாத 5 முதல் 10 நபர்களை நீங்கள் சந்திப்பீர்கள். அதற்கு எதிராக எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை” என்றார். (ஐ)

### இளையோர் உலகக் கிண்ணம்:

## பாகிஸ்தானை வீழ்த்தி இறுதிக்கு ஆஸி. தகுதி!

பெனோனி, பெப். 10

நடப்பு இளையோர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் பாகிஸ்தானை ஒரு விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியுள்ளது அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி. இதன் மூலம் நாளை நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் இந்திய அணியுடன் அவுஸ்திரேலியா பலப்பரீட்சை மேற்கொள்கிறது.

தென்னாபிரிக்க நாட்டில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் 16 அணிகள் பங்கேற்று விளையாடின. மொத்தம் 41 போட்டிகள். இந்திய அணி நடப்பு சம்பியன் என்ற அந்தஸ்துடன் களம் கண்டுள்ளது. முதல் அரையிறுதி ஆட்டத்தில் தென்னாபிரிக்காவை வீழ்த்தி முதல் அணியாக இந்தியா இறுதிக்கு முன்னேறியது.

இந்த சூழலில் வியாழக்கிழமை நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் பாகிஸ்தான் - அவுஸ்திரேலிய அணிகள் விளையாடின.

நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா பந்து வீச்சைத் தெரிவு செய்தது. முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி, 48.5 ஓவர்களில் 179 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தது.

தொடர்ந்து 180 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை ஆஸி. அணி விரட்டியது. 49.1 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 181 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சாளர் அலி ராசா, 4 விக்கெட்களை கைப்பற்றியிருந்தார். (ஐ)



## நியூசிலாந்துடனான டெஸ்ட்; அவுஸ்திரேலிய அணி அறிவிப்பு!



சிட்னி, பெப். 10

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இந்த மாத இறுதியில் நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் சென்று 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 மற்றும் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர்களில் விளையாடுகிறது.

இந்தத் தொடரில் இரு அணிகளுக்கு இடையே முதலில் ரி - 20 தொடர் நடைபெறவுள்ளது.

ரி - 20 தொடர் முடிவடைந்தவுடன் இரு அணிகளுக்கு இடையேயான முதலாவது டெஸ்ட் போட்டி வரும் 29ஆம் திகதி தொடங்கவுள்ளது.

இந்த டெஸ்ட் தொடருக்கான அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**அணி விவரம் -**

பட் கம்மின்ஸ், ஸ்கொட் பொலண்ட், அலேக்ஸ் ஹாரி, கமரூன் கிறீன், ஜோஷ் ஹசில்வூட், டிராவிஸ் ஹெட், உஸ்மான் கவாஜா, மார்ன்ஸ் லபுஷாக்னே, நதன் லயன், மிட்செல் மார்ஷ், மைக்கல் நெசர், மத்தியூ ரென்ஷா, ஸ்மித், மிட்செல் ஸ்ரார்க்.

# கட்டாருடன் 78 பில்லியன் டொலருக்கு இந்தியா எரிவாயு ஒப்பந்தம்!

## இந்தியாவுக்கு எவ்வளவு லாபம் தெரியுமா?

கடந்த செவ்வாய்க்கிழமை (பிப்ரவரி 6) இந்தியாவுக்கும் கட்டாருக்கும் இடையே ஒரு முக்கிய ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தம் அடுத்த 20 ஆண்டுகளுக்கானது. அதன் மொத்த செலவு 78 பில்லியன் அமெரிக்க டாலர்கள்.

இந்தியா 2048-ஆம் ஆண்டு வரை கட்டாரிடம் இருந்து திரவ இயற்கை எரிவாயுவை (எல்.என்.ஜி) வாங்குவதற்கான ஒப்பந்தம்தான் இது.

இந்தியாவின் மிகப்பெரிய எல்.என்.ஜி இறக்குமதி நிறுவனமான பெட்ரோநெட் எல்.என்.ஜி லிமிட்டெட், கட்டாரின் அரசாங்க நிறுவனமான 'கட்டார் எனெர்ஜி'யுடன் இந்த ஒப்பந்தத்தைக்








கையெழுத்திட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ், கட்டார் ஒவ்வொரு ஆண்டும் 75 லட்சம் டன் எரிவாயுவை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யும்.

இந்த வாயு, மின்சார உற்பத்தி, உரத் தயாரிப்பு, மற்றும் சி.என்.ஜி.யாக மாற்றப் பயன்படுகிறது.

**இந்த ஒப்பந்தத்தின் சிறப்பு என்ன?**

இந்த ஒப்பந்தம், கோவாவில் 2024-ஆம் ஆண்டு இந்திய எரிசக்தி வாரத்தின் முதல் நாளான கடந்த செவ்வாய்க்கிழமை (பிப்ரவரி 6) கையெழுத்தானது.

தற்போது இருக்கும் ஒப்பந்தத்தை விட மிகக் குறைந்த விலையில் செய்யப்பட்டுள்ளதால் இந்த ஒப்பந்தம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கூறப்படுகிறது.

பெட்ரோநெட் எல்.என்.ஜி நிறுவனம் தனது அறிக்கையில், எரிவாயு இறக்குமதி தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே 1999-ஆம் ஆண்டு ஜூலை 31-ஆம் தேதி ஒப்பந்தம் கையெழுத்தானது என்றும், அது 2028-ஆம் ஆண்டு வரையிலானது என்றும் கூறியிருந்தது.

இப்போது புதிய ஒப்பந்தம் 2028-ஆம் ஆண்டு துவங்கி 20 ஆண்டுகளுக்குச் செய்யப்பட்டுள்ளது.

எரிவாயு வாங்கப்படும் மொத்த விலை குறித்து எந்த தகவலும் வெளியிடப்படாத போதும், அதன் விலை தற்போதைய ஒப்பந்தத்தை விட குறைவாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

ஆங்கில செய்தித்தாளான 'தி இந்தியன் எக்ஸ்பிரஸ்" படி, இந்தப் புதிய ஒப்பந்தம் அடுத்த 20 ஆண்டுகளில் சுமார் 50,000 கோடி இந்திய ரூபாயைச் சேமிக்க வழிவகுக்கும்.

பெட்ரோநெட் நிறுவனம் இரண்டு ஒப்பந்தங்களின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் கட்டாரில் இருந்து ஆண்டுக்கு 85 லட்சம் டன் எல்.என்.ஜி வாயுவை இறக்குமதி செய்கிறது.

இரு நாடுகளுக்கும் இடையிலான முதல் ஒப்பந்தம் 25 ஆண்டுகளுக்கு முன்பு கையெழுத்தானது, இது 2028 வரை செல்லுபடியாகும்.






தற்போது இது 2048 வரை மேலும் 20 ஆண்டுகள் நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும் 10 லட்சம் டன்களுக்கான மற்றொரு ஒப்பந்தம் 2015-இல் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தங்கள்மீது தனித்தனியாக பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று பி.டி.ஐ செய்தி நிறுவனத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கட்டாரின் எரிவாயு வளம்**

இந்தியாவுக்கும் கட்டாருக்கும் இடையிலான உறவு ஆரோக்கியமாக இருந்து வந்துள்ளது. ஆனால் கடந்த சில மாதங்களாக, இதில் சில சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

கட்டார் உலகின் மிகப்பெரிய எல்.என்.ஜி ஏற்றுமதியாளராக இருந்து வந்தது. ஆனால் சமீபத்தில் அமெரிக்கா கட்டாரை முந்தியது.

கட்டார் ஆண்டுதோறும் 7.7 கோடி டன் எரிவாயுவை உற்பத்தி செய்கிறது, இதனை 2027-ஆம் ஆண்டு 12.6 மில்லியன் டன்கள் ஆக அதிகரிக்க விரும்புகிறது. இதன்மூலம் ஆசியா மற்றும் ஐரோப்பாவில் அதன் பிடியை வலுப்படுத்த எத்தனிக்கிறது. இவ்விரு கண்டங்களில் எரிவாயு ஏறுமதிக்குள் அமெரிக்கா நுழைய முயற்சிக்கும் நிலையில் கட்டாருக்கு இது முக்கியமானதாகிறது.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம், இஸ்ரேலுக்கு உளவு பார்த்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட 8 முன்னாள் கடற்படை அதிகாரிகளுக்கு கட்டார் நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது. டிசம்பர் இறுதியில் மரண தண்டனை குறைக்கப்பட்டது.

**இந்தியாவின் எரிவாயு தேவை**

ஆற்றல் நுகரும் உலக நாடுகளில், இந்தியா மூன்றாவது இடத்தை வகிக்கிறது. 2070-ஆம் ஆண்டுக்குள் இந்தியா நிகர பூஜ்ஜிய கார்பன் உமிழ்வை இலக்காகக் கொண்டுள்ளது. இதை அடைவதற்கு இயற்கை எரிவாயு முக்கிய பங்கு வகிக்கிறது.

இந்த முயற்சியின் கீழ், 2030-ஆம் ஆண்டுக்குள் நாட்டில் இயற்கை எரிவாயு பயன்பாட்டின் பங்கை 6.3 விதம் இருந்து 15 வீதம் ஆக அதிகரிக்க இந்திய அரசு விரும்புகிறது.

பெட்ரோநெட் மற்றும் கட்டார் எரிசக்தி இடையே தற்போதுள்ள நீண்டகால ஒப்பந்தம் இந்தியாவின் எல்.என்.ஜி இறக்குமதியில் 35 வீதம் ஆகும் என்றும் இது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தம் என்றும் பெட்ரோநெட் தலைமை நிர்வாக அதிகாரி அக்ஷய் குமார் சிங் கூறுகிறார்.

இந்த ஒப்பந்தம் எரிசக்தி பாதுகாப்பையும், தூய்மையான எரிசக்தி விநியோகத்தையும் உறுதி செய்வதோடு இந்தியா மேம்பட்ட பொருளாதார வளர்ச்சியை நோக்கி செல்ல உதவும் என்றும் அவர் கூறினார்.

**இந்தியா எவ்வளவு எரிவாயு இறக்குமதி செய்கிறது?**

கட்டாரைத் தவிர, இந்திய நிறுவனங்கள் ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்காவுடன் எல்.என்.ஜி.க்கான ஒப்பந்தங்களைச் செய்துள்ளன. ஆனால் இந்தியா பயன்படுத்தும் எல்.என்.ஜி.யில் பாதிக்கும் மேற்பட்டது கட்டாரில் இருந்து மட்டுமே இறக்குமதி செய்கிறது.

இந்தியாவின் அதிகாரப்பூர்வ வர்த்தகத் தரவுகளின்படி, 2022-23-ஆம் ஆண்டில் இந்தியா சுமார் 2 கோடி டன் எல்.என்.ஜி.யை இறக்குமதி செய்தது. இதில் சுமார் 54 வீதம் (சுமார் 1.1 கோடி டன்கள்) கட்டாரில் இருந்து வந்தது.

அதே நிதியாண்டில், இந்தியா கட்டாரில் இருந்து மொத்தம் சுமார் 1.3 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான எரிவாயுவை இறக்குமதி செய்துள்ளது, இதில் எல்என்ஜி இறக்குமதி சுமார் 69,200 கோடி ரூபாய் ஆகும். இது மொத்த இறக்குமதியில் 49.5வீதம் ஆகும்.

இயற்கை எரிவாயு, டீசல் மற்றும் பெட்ரோலை விட தூய்மையானதாகக் கருதப்படுகிறது. இது கச்சா எண்ணெயை விட மலிவானது.

இந்தியா கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு இறக்குமதியைச் சார்ந்

(16ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு



# ‘போரின்போது காணாமல் ஆக்கப்பட்ட தமிழருக்கு இராணுவமே பொறுப்பு”

## வவுனியா மேல் நீதிமன்றம் உத்தரவு

ரஞ்சன் அருண் பிரசாத்






இலங்கையில் யுத்தம் நடைபெற்ற காலப் பகுதியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட கந்தசாமி இளரங்கனுக்கான பொறுப்பை இலங்கை ராணுவம் ஏற்க வேண்டும் என வவுனியா மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி எம்.இளஞ்செழியன் கடந்த புதன்கிழமை (பிப். 07) இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சார்பில் முன்னிலையாக மூத்த சட்டத்தரணி கே.எஸ்.ரத்தினவேல் தெரிவித்தார்.

### நடந்தது என்ன?

கந்தசாமி இளரங்கன் என்ற 28 வயதான இளைஞன், 2006ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் தேதி காணாமல் போனதாக அவரது தாய் முறைப்பாடு செய்துள்ளார். வாகன ஓட்டுநரான கந்தசாமி இளரங்கன் ஓமந்தை வழியாக கொழும்பு நோக்கிப் பயணித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும், இலங்கை ராணுவத்திற்கும் இடை யிலான முக்கிய சோதனைச் சாவடியாக ஓமந்தை சோதனைச் சாவடி அந்தக் காலப் பகுதியில் காணப்பட்டது.

பெரும்பாலான தமிழர்கள் ஓமந்தை சோதனைச் சாவடியில் வைத்தே காணா மல் ஆக்கப்பட்டதாக இன்றும் குற்றச் சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர்.



இந்நிலையில், கந்தசாமி இளரங்கன் பயணி ஒருவரை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விடுவதற்காக வேன் ஒன்றை ஓமந்தை சோதனைச் சாவடி வழியாகச் செலுத்தி யுள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் கட்டுப்பாட்டு பகுதியிலிருந்து ராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வருகை தந்த நிலையில், கந்தசாமி இளரங்கன், அவருடன் பயணித்த பயணி ஆகியோரை ராணுவம் இடைமறித்து சோதனை செய்துள்ளதாக மூத்த சட்டத்தரணி கே.எஸ். ரத்தினவேல் தெரிவித்தார்.

“ஓமந்தை சோதனைச் சாவடியில் ராணுவம் சோதனை செய்ததன் பின்னர், அவர் தொடர்பான தகவல்கள் எதுவும் கிடையாது. அவர் அந்த வழியாகப் பயணித்தமைக்கான ராணுவப் பதிவு, பதிவுப் புத்தகத்தில் காணப்படுகின்றது. ஆனால், அவர் இத்தனை மணிக்கு வந்தார் என்பது தொடர்பான பதிவு உள்ளது. ஆனால், போனமைக்கான பதிவு இல்லை,” என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி கே.எஸ்.ரத்தினவேல் தெரிவித்தார்.

கடும் கட்டுப்பாடுகள் நிலவிய காலப் பகுதி என்பதால், கந்தசாமி இளரங்கனின் தாயாருக்கு உடனடியாக, அவரது மகனைத் தேட முடியாத நிலைமை அன்று காணப்பட்டுள்ளது.

அதன் பின்னரான காலத்தில் தனது மகன் தொடர்பில் போலீசார் உள்ளிட்ட பாதுகாப்பு தரப்பிடம் ஆராய்ந்துள்ளதுடன், தனது மகன் தொடர்பான எந்த வித தகவல்களையும் அவரால் அப்போது பெற்றுக் கொள்ள முடியவில்லை.

அதையடுத்து, கந்தசாமி இளரங்கனின் தாயார், ஐ.சி.ஆர்.சி, மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலீஸ் உயர் அதிகாரிகள் என சம்பந்தப்பட்ட தரப்பிடம் முறைப்பாடுகளைச் செய்த போதிலும், தனது மகன் தொடர்பான தகவல்களை தாயினால் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

இந்த நிலையிலேயே, கந்தசாமி இளரங்கனின் தாய், வவுனியா மேல் நீதிமன்றத்தில் 2007ஆம் ஆண்டில் ஆட்கொணர்வு மனுவை தாக்கல் செய்துள்ளதாக, மூத்த சட்டத்தரணி கே.எஸ்.ரத்தினவேல் குறிப்பிடுகின்றார்.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக இலங்கை ராணுவ தளபதி, ராணுவத்தின் 211ஆம் படையணியின் கட்டளை தளபதி உள்ளிட்ட மூவர் பெயரிடப்பட்டுள்ளனர்.

“இலங்கை ராணுவத்தால் இந்த மனு மீது ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது. அவர் வந்தது உண்மை தான். ஆனால், அப்போதே அவர் சென்றுவிட்டார்,” என இலங்கை ராணுவம் ஆட்சேபனை செய்ததாக மூத்த சட்டத்தரணி கூறு கின்றார்.

இவ்வாறான நிலையில், இறுதிக் கட்ட யுத்தம் வலுப்பெற்ற காலகட்டத்தில் மக்கள் இடப் பெயர்வுக்கு உள்ளானது டன், நீதிமன்ற நடவடிக்கைக ளும் ஸ்தம்பிதமடைந்துள் ளன.



அதன் பின்னர், யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து, கந்தசாமி இளரங்கனின் தாய், 2013ஆம் ஆண்டு இந்த வழக்கை மீள தொடர்வதற்கு மேல் நீதிமன்றத்திடம் அனுமதி கோரியுள்ளார்.

இதன் பின்னரான காலத்தில் இந்த வழக்கு தொடர்ந்து நடத்தப்பட்டு வந்ததுடன், மனுதாரர் மற்றும் பிரதிவாதிகள் உள்ளிட்ட சந்தேகநபர்கள் வவுனியா மேல் நீதி மன்றத்தில் சாட்சியங்களை வழங்கியுள்ள னர்.

“கந்தசாமி இளரங்கன் வந்தது உண்மை. ஆனால், அவர் சென்றுவிட்டார்” என பிரதிவாதிகள் சாட்சியமளித்த பின்னணியில், அதை கந்தசாமி இளரங்கனின் தாய் நீதிமன்றத்தில் நிராகரித்துள்ளார்.

“அவர் ராணுவத்திடம் இருந்து சென்றிருந்தால், எனக்கு அறிவித்திருப்பார். அவர் அந்த இடத்திலேயே காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்,” என தாய் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

அத்துடன், கந்தசாமி இளரங்கனுடன் வேனில் பயணித்ததாகக் கூறப்படும் இளைஞனான உமாதரன் தொடர்பான தகவல்களும் இல்லை எனக் கூறிய மூத்த சட்டத்தரணி, அவர் தொடர்பில் யாரும் நீதிமன்றத்தில் வழக்குகளைத் தாக்கல் செய்யவில்லை எனக் குறிப்பிட்டார்.

இவ்வாறான விடயங்களை ஆராய்ந்ததை அடுத்தே, வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி எம்.இளஞ்செழியன் முக்கிய தீர்ப்பொன்றை வழங்கியுள்ளார்.

### தீர்ப்பில் என்ன கூறப்பட்டுள்ளது?

‘மனுதாரரர் அளித்த சாட்சியங்களிலும், ஏனைய சாட்சியங்களிலும் இருந்து கந்தசாமி இளரங்கன் அந்த இடத்திற்குப் போயிருக்கிறார். ஆனால், அவர் திரும்பி வரவில்லை. இவர் முற்று முழுதாக சிறிலங்கா ராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே இருந்துள்ளார்.

கடைசியாக அவர் ராணுவத்தின் பொறுப்பிலேயே இருந்துள்ளார். எனவே, ராணுவமே பதிலளிக்க வேண்டும். அவர்களே பொறுப்பேற்க வேண்டும்,” என வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி எம்.இளஞ்செழியன் தீர்ப்பு வழங்கியுள்ளதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சார்பிலான மூத்த சட்டத்த ரணி கே.எஸ்.ரத்தினவேல் தெரிவித்தார்.

சர்வதேச சட்டங்கள், இலங்கை நீதிமன்றத்தின் முந்தைய தீர்ப்புகள், வெளிநாட்டு நீதிமன்ற தீர்ப்புகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான சட்டங்கள் ஆகி யவற்றை ஆராய்ந்தே இந்தச் சம்பவத்திற்கு இலங்கை ராணுவம் பொறுப்பேற்க வேண்டும் என்ற தீர்ப்பை நீதிபதி வழங் கியுள்ளார் என அவர் குறிப்பி டுகின்றார்.

### நீதிபதி ராணுவத்திற்கு விடுத்த உத்தரவு

எதிர்வரும் ஜூன் 3ஆம் தேதி அல்லது அதற்கு முன்னரான ஒரு தேதியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட கந்தசாமி இளரங்கனை, உயிருடன் நீதிமன்றத்தில் முன் னிலைப்படுத்த வேண்டும் என வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி எம்.இளஞ்செழியன், இலங்கை ராணுவத்திற்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அது தவறும் பட்சத்தில், இலங்கை ராணுவம் கந்த சாமி இளரங்கனை வலிந்து காணாமல் ஆக்கியதாக தீர் மானித்து, அதற்கு நட்ட ஈடாக மனுதாரருக்கு மூன்று பிரதிவாதிகளும் கூட்டாக ஒரு மில்லியன் ரூபாவை வழங்க வேண்டும் எனவும் நீதிபதி தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

### இப்படியான தீர்ப்புகள் இதற்கு முன்னர் வழங்கப்பட்டுள்ளதா?

‘சிங்கள பகுதிகளில் இவ்வாறான தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், தமிழர் பகுதியில் இதுவே முதல் முறை. ஆட்கொணர்வு மனு மீதான வழக்கில் தண்டனை கொடுப்பதற்கான அதிகாரம் கிடையாது.

ஏனென்றால், இது சிவில் வழக்கு. நஷ்ட ஈடு மட்டும் தான் கொடுக்கச் சொல்லலாம்,” என மூத்த சட்டத்தரணி கே.எஸ்.ரத்தினவேல் குறிப்பிட்டார்.

### இலங்கை ராணுவத்தின் பதில்

இந்தத் தீர்ப்பு தொடர்பில் இலங்கை ராணுவத்தின் சட்டப்பிரிவு சார்பில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக இலங்கை ராணுவம் தெரிவித்தது.

“இந்த வழக்கில் காணாமல் போன நபர் இருப்பாராயின், எதிர்வரும் ஜூன் 3ஆம் தேதிக்கு முன்னர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு நீதிமன்றம் கூறியுள்ளது.

அவ்வாறு இல்லையென்றால், மனுதாரருக்கு ஜூன் 3ஆம் தேதி ஆகும்போது ஒரு மில்லியன் ரூபா செலுத்துமாறு நீதிமன்றம் கூறியுள்ளது. இந்த விடயம் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எமது சட்டப் பிரிவு அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கிறது. இந்த விடயம் தொடர்பில் இதற்கு மேல் தாம் கூறுவது சிரமமான விடயமாகும்,” என, இலங்கை ராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ரவி ஹேரத் கூறினார். ●

# கட்டாருடன் 78 பில்லியன் டொலருக்கு...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது. அதன் கச்சா எண்ணெயில் தோராயமாக 85 சதவீதத்தை இறக்குமதி செய்கிறது. அதேசமயம், இயற்கை எரிவாயு மிகவும் முக்கியமானதாகவும், நாட்டின் ஆற்றல் தேவைகளை மாற்றுவதற்கு ஏற்றதாகவும் கருதப்படுகிறது.

**புதிய ஒப்பந்தம் எப்படிச் செலவைக் குறைக்கும்?**

இந்தியா மற்றும் கட்டார் இடையே எல்.என்.ஜி தொடர்பான இந்த ஒப்பந்தம் எக்ஸ் ஷிப் (DES) அடிப்படையில் செய்யப்பட்டது. இதன்படி எரிவாயு கப்பல் மூலம் துறைமுகத்தை அடையும். அதாவது ஹோம் டெலிவரி போல எரிவாயுவை அனுப்பி வைத்துவிடுவார்கள்.

1999-இல் கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தம் ஃப்ரீ ஆன் போர்டு (FOB) அடிப்படையில் செய்யப்பட்டது. FOB-இல் எரிவாயு வாங்குபவர்தான் ஏற்றுமதிக்கு ஏற்பாடு செய்யவேண்டும். விற்பனை செய்யும் இடத்தில் இருந்து எரிவாயுவை எடுத்துக் கொண்டு வர வேண்டும். ஆனால், DES உடன்பாட்டில் இந்தப் பொறுப்பு விற்பனை செய்யும் நாட்டுக்கு உரியது.

இதனால் னுநுளு-இன் கீழ் செய்யப்படும் ஒப்பந்தம் எரிவாயுவை வாங்கும் நாட்டுக்கு செலவைக் குறைக்கிறது.

இந்திய எரிவாயு இறக்குமதி நிறுவனமான பெட்ரோநெட் எல்.என்.ஜி லிமிடெட் (பி.எல்.எல்) என்பது ஓ.என்.ஜி.சி, இந்தியா ஆயில், கெயில் மற்றும் பாரத் பெட்ரோலியம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியாகும்.

குஜராத்தின் தாஹேஜ் துறைமுகத்தில் பி.எல்.எல் முனையம் உள்ளது. அங்கு கப்பல் மூலம் எரிவாயு கொண்டுவரப்பட்டு, பின்னர் அது வெவ்வேறு பெட்ரோலிய நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்படுகிறது.

பி.எல்.எல் நிறுவனம், கட்டார் எரிசக்தியுடனான இந்த ஒப்பந்தம் உரங்கள், நகர எரிவாயு விநியோகம், சுத்திகரிப்பு மற்றும் மின் உற்பத்தி போன்ற அதிக நுகர்வுத் துறைகளுக்கு தடையின்றி எரிவாயு வழங்குவதை உறுதி செய்யும் என்று கூறுகிறது.

கட்டாரின் எரிசக்தி அமைச்சரும், கட்டார் எரிசக்தியின் தலைமை நிர்வாக அதிகாரியுமான சாத் அல்-காபி, கடந்த செவ்வாயன்று கோவாவில் நடந்த இந்திய எரிசக்தி வாரக் கொண்டாட்டத்தில் இந்தியாவின் சந்தை பொருளாதாரத்தை விரிவுபடுத்தும் என்று நம்புவதாகவும் கூறினார்.

**இந்தியா - கட்டார் உறவு கடந்து வந்த பாதை**

இந்தியாவுக்கும் கட்டாருக்கும் இடையே நட்புறவு உள்ளது. ஆனால் இந்த உறவில் முதல் சவால் ஜூன் 2022-ஆம் ஆண்டு வந்தது. பா.ஜ.க செய்தித் தொடர்பாளர் நுபுர் ஷர்மா ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் முகமது நபியைப் பற்றி இழிவான கருத்துக்களை வெளியிட்டார்.

அந்த நேரத்தில், இந்தியா ‘பொது மன்னிப்பு” கோர வேண்டும் என்று கூறிய முதல் நாடு கட்டார்.

கட்டார் இந்திய தூதரை அழைத்து தனது கடும் எதிர்ப்பை தெரிவித்தது. இஸ்லாமிய உலகில் கோபம் பரவாமல் இருக்க, பா.ஜ.க உடனடியாக நுபுர் ஷர்மாவை நீக்கியது.

அதைத் தொடர்ந்து எட்டு முன்னாள் இந்திய கடற்படை வீரர்களின் மரண தண்டனை, இந்தியா-கட்டார் உறவுகளுக்கு இரண்டாவது பெரிய சவாலாக அமைந்து.

கட்டாரில் சுமார் 8-9 லட்சம் இந்தியர்கள் பணிபுரிவதால், அங்குள்ள இந்தியர்களின் நலன்களுக்குப் பங்கம் விளையுமோ என்ற அச்சம் ஏற்பட்டது.

**வளைகுடா நாடுகள் தொடர்பான மோடி அரசின் கொள்கை**

தனது கடந்த 10 ஆண்டு ஆட்சியில் நரேந்திர மோடி வளைகுடாவின் இஸ்லாமிய நாடுகளுடனான உறவை வலுப்படுத்த முனைப்புகள் எடுத்து வந்துள்ளார்.

பிரதமர் மோடி இதுவரை நான்கு முறை ஐக்கிய அரபு அமீரகத்திற்கு, சென்றிருக்கிறார். முதல் சுற்றுப்பயணம் ஆகஸ்ட் 2015, இரண்டாவது பிப்ரவரி 2018 மற்றும் மூன்றாவது ஆகஸ்ட் 2019-இல் நடந்தது.

பிரதமர் மோடி தனது நான்காவது அமீரகப் பயணத்தை ஜூன் 2022-இல் மேற்கொண்டார். 2015-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மோடி ஐக்கிய அரபு அமீரகம் சென்றபோது, அது முந்தைய 34 ஆண்டுகளில் இந்தியப் பிரதமர் ஒருவர் அங்கு மேற்கொண்ட முதல் பயணமாக இருந்தது. மோடிக்கு முன், இந்திரா காந்தி 1981-இல் ஐக்கிய அரபு அமீரகம் சென்றிருந்தார்.

கடந்த ஆண்டு ஜூன் 28-ஆம் தேதி பிரதமர் மோடி அபுதாபி விமான நிலையத்தில் தரையிறங்கியபோது, அவரை வரவேற்க ஐக்கிய அரபு அமீரக அதிபர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யான் அங்கு வந்திருந்தார். அவர் அப்படி வருவது நெறிமுறைக்கு எதிரானது. இந்தியப் பிரதமருக்காக அவர் அதை மீறினார்.

மோடிக்கு கிடைத்த இந்த வரவேற்பு குறித்து பாகிஸ்தானில் பரபரப்பாக பேசப்பட்டது. பாகிஸ்தான் பிரதமர் ஷபாஸ் ஷெரீப் கடந்த மே மாதம் ஐக்கிய அரபு அமீரகம் சென்றதாகவும், அவரை மத்திய அமைச்சர் ஒருவர் வரவேற்றதாகவும் இந்தியாவுக்கான பாகிஸ்தானின் முன்னாள் உயர் ஆணையர் அப்துல் பாசித் தெரிவித்திருந்தார்.

இந்தியாவின் இந்த நற்பெயர் தன்னை உறுத்துகிறது என்று அப்துல் பாசித் கூறியிருந்தார்.

ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யானுடன் நரேந்திர மோடிக்கு எதிர்பாராத நட்பு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. 2017-ஆம் ஆண்டு குடியரசு தினத்தையொட்டி, மோடி அரசு முகமது பின் சயீத் அல் நஹ்யானை சிறப்பு விருந்தினராக அழைத்தது.

அப்போது முகமது பின் சயீத் அல் நஹ்யான் ஐக்கிய அரபு அமீரக அதிபராக இருக்கவில்லை. அபுதாபியின் பட்டத்து இளவரசராக இருந்தார். அதுவரை ஒரு நாட்டின் பிரதமர் அல்லது அதிபரை மட்டுமே குடியரசு தினத்தில் சிறப்பு விருந்தினராக இந்தியா அழைத்திருந்தது. ஆனால் 2017 குடியரசு தினத்தில் அல் நஹ்யான் தலைமை விருந்தினராக அழைக்கப்பட்டார்.

அபுதாபியின் முன்னாள் மேற்கத்திய தூதர் ஒருவர், மோடியின் நடைமுறை அரசியல் மனப்பான்மையும் வலிமையான தலைவராக இருக்கும் பாணியும் சவூதி மற்றும் ஐக்கிய அரபு அமீரக இளவரசர்களால் விரும்பப்படுவதாகக் கூறினார்.

பிரதமர் மோடி 2016 மற்றும் 2019-ஆம் ஆண்டுகளில் சவூதி அரேபியாவிற்கு விஜயம் செய்தார். 2019-இல் பஹ்ரைன், 2018-இல் ஓமன், ஜோர்டான், பாலஸ்தீனியப் பிரதேசம், மற்றும் 2016-இல் கத்தார் ஆகிய நாடுகளுக்குச் சென்றார்.

2015-இல் ஷேக் சயீத் கிராண்ட் மசூதி மற்றும் 2018-இல் ஓமன் சுல்தான் கபூஸ் கிராண்ட் மசூதியையும் பார்வையிட்டார். நரேந்திர மோடிக்கு சவூதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் பஹ்ரைன் ஆகிய நாடுகளின் உயரிய குடிமகன் விருதும் வழங்கப்பட்டது.





